இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 477 | 1996 மார்ச் 14 | ரூபா 6.0

உள்ளே

■ நாளந்த எல்லாவலை கொலையின் படிப்பினை ..... 2
■ செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்! புனர்வாழ்வு முகாமில் சந்திக்க அனுமதி வழங்க நீதிமன்றம் மறுப்பு ..... 3
■ பீட்டர் செனமன் 55 வருடகால எதிர்ப்புரட்சி அரசியல் ..... 4
■ ஜே.வீ.பி. தலைவர்கள் அமெரிக்க தூதுவருடன் பேச்சு வார்த்தை ..... 13
■ கொழும்பு துறைமுகத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு சீ.எம்.யூ. தலைமையே பொறுப்பு ..... 14

**இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்**

– விஜே டயஸ் 6–7 பக்கம்

# சோசலிச சமத்துவக் கட்சியை வெற்றியீட்ட செய்வோம்!

## சோசலிச சமத்துவக் கட்சியின் உள்ளூராட்சி சபை தேர்தல் விஞ்ஞாபனம், 1997

சோசலிச சமத்துவக் கட்சி மார்ச் 21ம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் யூ.என்.பி., பொதுஜன முன்னணி முதலான முதலாளித்துவக் கட்சிகளுக்கும் குழுக்களுக்கும் எதிராக பண்டாரவளை, அம்பகமுவ, பலப்பிட்டிய முதலான மூன்று பிரதேச சபைகளுக்குப் போட்டியிடுகின்றது. பண்டாரவளைக்கு 13 பேரும் அம்பகமுவைக்கு 29 பேரும் பலப்பிட்டியவுக்கு 23 பேருமாக மொத்தம் 65 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். சோசலிச சமத்துவக் கட்சி உள்ளூராட்சி தேர்தலில் நிற்பது சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கிடும் தொழிலாளர் விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் வேலைத் திட்டத்துக்காக இடம்பெறும் அரசியல் போராட்டத்தின் ஒரு பாகமாகவேயாகும்.

இந்த வேலைத்திட்டத்தை சூழ அணிதிரளும்படியும் சோ.ச.க. போர்ட்டியிடும் மூன்று உள்ளூராட்சி சபைகளிலும் அதன் வேட்பாளர்களுக்கு வாக்களிப்பதன் மூலம் அந்த வேலைத் திட்டத்துக்கான போராட்டத்தைப் பலப்படுத்துமாறும் நாம் உங்களை



பண்டாரவளை பிரதேச சபை, சுயேட்சைக் குழு இல. 1., குழுவின் தலைவர் வஜிர பானினி விஜேசிரிவர்தன



அம்பகமுவை பிரதேச சபை, சுயேட்சைக் குழு இல.1. குழுவின் தலைவர் மயில்வாகனம் தேவராஜா



பலப்பிட்டிய பிரதேச சபை, சுயேட்சைக் குழு இல.1, குழுவின் தலைவர் ரத்னசிரி மலலகம

வேண்டுகின்றோம். ஏனைய உள்ளூராட்சி சபைகளில் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் வாக்களிக்க இலாயக்கான வேறு எந்த ஒரு கட்சியும் கிடையாது.

28 ஆண்டுகளுக்கு மேலாக மார்க்சிச ட்ரொட்ஸ்கிச கட்சிக் காரியாளர்களைக் கட்டியெழுப்பிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களின் போராட்டத்தின் ஆயுதமாகவும். தலைமையாகவும் செயற்படுவதற்கு சோசலிச சமத்துவக் கட்சியைக் கட்டியெழுப்பி உள்ளது. சோ.ச.க. அனைத்துலகக் குழுவினால் தலைமை தாங்கப்படும் நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியாகும். யூ.என்.பி., பொதுஜன முன்னணி அரசாங்கங்கள் எமது கட்சியைத் தேர்தல் கருமங்களுக்காகப் பதிவு செய்வதை நிராகரித்துள்ளதால் இம்முறையும் எமது வேட்பாளர்கள் சுயேட்சை குழுக்களாகவே போட்டியிடுகின்றனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்த[...] முதலாளித்துவ வெகுஜனத் தொடர்பு சாதனங்களால் "குட்டி தேர்தல்" என[...] பிரச்சாரம் செய்யப்படுகின்ற போதிலு[...] பொதுமக்களின் எதிரில் பிரமாண்டமானது தீர்க்கமானதுமான பிரச்சினை இருந்[...] கொண்டுள்ளது. யூ.என்.பி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்[...] இப்போது பொதுஜன முன்னண[...] அரசாங்கத்தினால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் தொழில், வாழ்க்கை தரம், நலன்புரி சேவை, ஜனநாய[...] உரிமைகள் அழிப்புக்களை நிறுத்துவது எப்படி? இந்த நிஜ பிரச்சினைகளை குழிதோண்டிப் புதைத்து, மக்களி[...] பார்வையை திசைதிருப் பிவி[...] முதலாளித்துவக் கட்சிகளும் தொடர்பு சாதனங்களும் ஒரு பிரச்சார யுத்தத்தி[...] இறங்கியுள்ளன.

பொய் வாக்குறுதிகளை வழங்கி 199[...] பொதுத் தேர்தலில் வாக்குக்களை சுருட்டிக்கொண்டு ஆட்சிக்கு வந்து

10ம் பக்கம் பார்க்[...]

# 135 தமிழரைப் பலிகொண்ட துயரச் சம்பவம்

கடந்த மாதம் மன்னாருக்கு சமீபமாக உள்ள நாச்சிக் குடா கடலில் படகு கவிழ்ந்து 135 தமிழ் மக்கள் கொல்லப்பட்டனர். விபத்துக்கு உள்ளான படகில் 160க்கு மேற்பட்டவர்கள் பயணம் செய்ததாகத் தெரிகின்றது. சிறுபிள்ளைகள், பெண்கள் அடங்கிய இவர்கள் இந்தியாவுக்கு புகலிடம் தேடி ஓடிய அகதிகளாவர். 90 சடலங்கள் மட்டும் கிடைக்கப்பெற்றதாக தகவல்கள் கிடைத்துள்ளன. இதுவரை காலம் நிகழ்ந்த படகு விபத்துச் சம்பவங்களில் ஒரு மோசமான சம்பவம் இதுவாகும். கடந்த ஆண்டில் இதே இடத்தில் அகதிகளைச் கொண்டு சென்ற படகு மூழ்கி 20 படகு விடுதலைப் புலிகளால் ஏற்பாடு செய்யப்பட்டதாகத் தெரிகின்றது. பொதுஜன முன்னணி அரசாங்க இனவாத யுத்தத்தினால் இருப்பிடங்கள் அழிக்கப்பட்டு, அகதிகளாக்கப்பட்ட மக்களை இந்தியாவுக்கு விரட்டுவது விடுதலைப் புலிகளின் பிற்போக்கு அரசியல் இயக்கத்தின் ஒரு அம்சமாகும். விடுதலைப் புலிகள் இம்மக்கள் அகதிகளாவதைக் கொண்டு இந்திய, ஏகாதிபத்தியவாதிகளது தலையீட்டை கோரப் பயன்படுத்துகின்றது

இந்த அவலச் சம்பவத்திற்கு பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளித்துவ வர்க்கமுமே

## "சமூக சமத்துவமின்மையும் அதிகாரத்துவமும் சோவியத் யூனியனுள் சோசலிசம் காட்டிக்கொடுக்கப்பட்டமையும்"

– பேராசிரியர் வடிம் றோகோவின்

ரூஷ்ய அறிவியல் அக்கடமியின் சமூக விஞ்ஞான நிறுவனத்தின் தலைமை ஆய்வாளரான கலாநிதி வடிம் றொகோவின் கடந்த டிசம்பரில் ஜேர்மனியின் ரூர், ஹம்போல்ட் பல்கலைக் கழகங்களில் இரண்டு விரிவுரைகளை நிகழ்த்தினார். இந்த விரிவுரைகளில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள், இளைஞர்கள், புத்திஜீவிகள் கலந்து கொண்டனர். பேர்ளின் ஹம்போல்ட் பல்கலைக் கழக விரிவுரைகளுக்கு 400க்கும் அதிகமானோர் வருகை தந்திருந்தனர். அத்தோடு அவர் மாஸ்கோ பொய் வழக்கு சம்பந்தமாக வானொலிகள், புதினப் பத்திரிகைகளுக்கும் பேட்டி வழங்கினார். 250க்கும் அதிகமான ஆய்வு நூல்களை எழுதியுள்ள இவர் சோவியத் யூனியனின் ஸ்டாலினிச அதிகாரத்துவத்துக்கு

படிப்பகம்

www.padippakam.com

எண்ணம்

# நாளந்த எல்லாவலை கொலையின் படிப்பினை

பொதுஜன முன்னணி அரசாங்க இரத்தினபுரி மாவட்ட எம்.பி. நாளந்த எல்லாவலையும் பொலிஸ் படையாள் ஒருவரும் கடந்த பெப்ரவரி 11ம் திகதி யூ.என்.பி.யின் முன்னணி கொலைக் குண்டர் கோஷ்டியினால் கொலை செய்யப்பட்டனர். 1988-90 காலப்பகுதியில் இளைஞருக்கு எதிரான ஒடுக்குமுறையின் போது கொலைக் குண்டனாக பெயர்போன யூ.என்.பி. எம்.பி.சுசந்த புஞ்சிநிலமேயுக்கும் இரத்தினபுரி மாஜி மேயரான மகிந்த ரத்னதிலகவுக்கும் எதிராக இக்கொலைக் குற்றச்சாட்டுத் தொடுக்கப்பட்டுள்ளது. உள்ளூராட்சி தேர்தல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டதும் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி முதலாளித்துவ குழுக்களுக்கு இடையே குத்து வெட்டுக்கள் உக்கிரமடைந்திருந்த நிலையிலேயே இக்கொலைகள் இடம்பெற்றுள்ளன.

கொலையாளிகளை ஒழித்துவைத்துவிட்டு பெருமிதப்படும் யூ.என்.பி.யும் கொலைக் குண்டரை தண்டிப்பது பற்றிக் கூப்பாடு போடும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் நாடெங்கும் ஒரு ஆத்திரமூட்டல் நிலைமையைத் தோற்றுவித்துள்ளன. முதலாளித்துவ தொடர்புச் சாதனங்கள் இந்த ஆத்திரமூட்டல்களுக்கு எண்ணெய் வார்க்கும் வகையில் பல்வேறு பட்ட சோகம் தோய்ந்த விளம்பரங்களையும் அறிக்கைகளையும் வெளியிடுவதன் மூலம் பொதுமக்களைத் தடம்புரளச் செய்யும் பிரச்சாரப் போரில் ஈடுபட்டுள்ளன.

"கடந்த இரண்டு வருடங்களாக கட்டியெழுப்பிய கட்சியின் ரூபம் நீரில் மூழ்கடிக்கப்பட்டுவிட்டதாக" யூ.என்.பி.தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியதாக முதலாளித்துவப் பத்திரிகைகள் பெரும் கவலையுடன் அறிவித்தன. யூ.என்.பி.தலைவர் "வருத்தம் அடைந்துள்ளதற்கு" காரணம் தமது இரத்தம் தோய்ந்த கரங்களை ஜனநாயக முகமூடியினுள் மறைத்துக் கொண்டு யூ.என்.பி.யின் கரங்களில் அரசியல் பலத்தை மீண்டும் சுருட்டிக் கொள்ள எடுத்த முயற்சி தவறிப்போனதால் உருவானதாக இருக்கலாம். மறுபுறத்தில் பொதுஜனங்களின் சகல தரப்பினருக்கும் எதிராகத் தொடுத்த தாக்குதல்களினால் மக்களின் வெறுப்புக்கு இலக்காகி செல்வாக்கு இழந்துபோன பொதுஜன முன்னணி அரசாங்கம் நாளந்த எல்லாவலையின் கொலையில் தொங்கிக் கொண்டு, அடக்குமுறை முகத்தை மூடிமறைத்துக்கொள்ளப் பார்க்கின்றது.

தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் கொலை செய்யப்படுகையில் பேசாமடந்தைகளாக இருந்துகொள்ளும் சமசமாஜ, ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சிகள் இக்கொலை பற்றிச் சுடச்சுட அறிக்கைகள் வெளியிட்டன. "கொலைக் கலாச்சாரத்துக்கு உடன் முடிவு கட்டவேண்டுமாயின் அரசியல் வாதிகளுக்கு வழங்கியுள்ள துப்பாக்கிகளை திருப்பிப் பெற வேண்டும் எனவும் பொதுஜன முன்னணியைச் சூழ சகலரும் ஒன்றிணைய வேண்டும்" எனவும் குறிப்பிட்டன. இந்த இலட்சணத்தில் பொதுமக்கள் எந்த ஒரு முதலாளித்துவ முகாமின் பின்னாலும் மண்டியிடத் தேவையில்லை.

முதலாளித்துவ அரசியல் குழுக்கள் ஒவ்வொன்றும் ஆளையாள் மிஞ்சிய விதத்தில் பொதுமக்களுக்கு எதிரான கொள்ளையின் பெரும் பங்கு யாருக்கு என்பதையிட்டு மோதிக் கொள்கின்றன. கொலைச் சம்பவம் சுட்டிக்காட்டுவது அதையே. புறம் ஒதுக்கித்தள்ளிவிட்டு, தமது பொது எதிரியான தொழிலாளர் வர்க்கம்,வறியமக்கள், இளைஞர்களின் இரத்தத்தைக் குடிக்க ஒன்றிணைந்து கொள்வது வழக்கம். எல்லாவலை கொலை மூலம் யூ.என்.பி.தனது கொலைச் சக்திகளை அபிவிருத்தி செய்துள்ள விதம் இதை எடுத்துக் காட்டுகின்றது. பொதுஜன முன்னணியும் இதனை பாவித்தபடி தொழிலாளர், ஒடுக்கப்பட்ட மக்களைத் தாக்க தனது பிற்போக்கு வலதுசாரி இயக்கத்தை வளர்த்து எடுக்கும் என நாம் பொதுமக்களுக்கு எச்சரிக்கின்றோம்.

இலங்கை ஆளும் வர்க்கத்தினுள் உக்கிரம் கண்டுள்ள நாய்ச் சண்டை கடந்த சில ஆண்டுகளாக நன்கு பிரசித்தி அடைந்துள்ளது. யூ.என்.பி.அரசாங்க காலத்தில் அரசாங்கத்தினுள்ளேயே நடந்த குத்து வெட்டுக்கள் அதன் பிரபல தலைமைகளான அத்துலத்முதலி, ஆர்.பிரேமதாச கொலை வரைக்கும் இட்டுச் சென்றன.

பொதுஜன முன்னணி ஆட்சிப் ஏபிடம் றியதால் தமது பலம் கவிழ்ந்துபோனதையிட்டு யூ.என்.பி. முதலாளிகளுக்கு பெரும் கொலைவெறி பிடித்துள்ளது. அன்று லஞ்சம், கடன், கப்பம், பொதுமக்கள் சொத்து சூறையாடல் என்ற விதத்தில் யூ.என்.பி.காரர்கள் நடாத்திய கொள்ளை அடிப்பு இன்று பொதுஜன முன்னணி முதலாளிகள் கைக்கு மாறியுள்ளது. இதற்கிடையில் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை அடக்க பொதுஜன முன்னணி அரசாங்கத்தால் முடியாது போய்விடுமோ என யூ.என்.பி.முதலாளிகள் கலங்கிப் போயுள்ளனர்.

யூ.என்.பி.அரசாங்க கொலைக் குண்டர்களை சுதந்திரமாக உலாவ விட்டது பற்றியும் அரசியல் வாதிகளுக்கு வழங்கிய துப்பாக்கிகளை மீளப்பெறாதது பற்றியும் பல்வேறு பட்ட சந்தர்ப்பவாதிகள் அரசாங்கத்திடம் புலம்புகின்றனர். இது ஒரு தவறா? இல்லவே இல்லை. பொதுஜன முன்னணி அரசாங்கத் தலைவர்கள் நன்கு அறிந்த ஒரு அரசியல் தீர்மானமே. சிறிசேன கூரே, டக்ளஸ் பீரிஸ் போன்ற நபர்கள் நாட்டில் இருந்தும் தப்பி ஓடியுள்ளனர். சிறிசேன கூரே ஜனாதிபதியின் வீட்டிற்கே களவாகப் போனதை நாடே அறியும். சுசந்த புஞ்சி நிலமேக்கள். ரத்னதிலககள் போலவே யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரளை பற்றியும் பொதுமக்கள் நன்கு அறிவர். யூ.என்.பி ஊழல்கள் பயங்கரங்கள் பற்றி மோசடி கதைகளை அளந்துகொண்டு பொதுஜன முன்னணியின் ஜனாதிபதியும் அமைச்சர்களும் யூ.என்.பி.காரர்களுடன் வர்க்க உறவுகளை கட்டியெழுப்பி இருந்தனர். யாருக்கு எதிராக? தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக ஆகும். புஞ்சிநிலமேக்களால் நடாத்தப்பட்ட தாக்குதல்களால் இந்த உறவுகளுக்கு குந்தகம் ஏற்பட்டுவிட்டதையிட்டு பொதுஜன முன்னணியினதும் யூ.என்.பி.யினதும் தலைவர்கள் கலங்குகின்றனர். ஆளும் வர்க்கத்தின் இந்தக் கும்பலும் ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களது வால்பிடிகளான சந்தர்ப்பவாதிகளும் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி முதலாளிகள் பொதுமக்களுக்கு எதிராகக் கைகோர்த்துக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொண்டுள்ளனர்.

## என்ன செய்ய வேண்டும்

இச்சமயத்தில் பொதுமக்கள் செய்ய வேண்டியது என்ன? ஆளும் வர்க்க தெரிந்ததே. பொதுமக்கள் போராட்டத்தை நசுக்க மூர்க்கமாகச் செயற்பட்ட விதமும் அம்பலமானது. யூ.என்.,பி.முதலாளிகள் இக்கொடிய வேலைத்திட்டம் அபிவிருத்திகாணும் பொருட்டு அரசாங்கத்தைப் பற்றிய பொய் விமர்சனங்களில் ஈடுபடும். முதலாளித்துவ ஆட்சி மிரட்டலுக்கு உள்ளாகும் போது தாமதிக்காது அரசாங்கத்துடன் பகிரங்கமாகக் கைகோர்த்துக் கொள்ளும். ல.ச.ச.க. கம்யூனிஸ்ட்-நவசமசமாஜ போன்ற முதலாளித்துவ முகாமுக்குள் நுழைந்து கொண்டுள்ளவர்கள் இந்த நிச அபிவிருத்தியை மூடிமறைத்து பொதுமக்களை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கிப் பலிகொடுக்க தொழிற்படுகின்றனர். எல்லாவலை கொலை அவர்களுக்கு அதற்கான ஒரு நல்ல சந்தர்ப்பமாக விளங்குகின்றது.

முதலாளித்துவத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாகி அமைப்பு ரீதியில் ஒருங்கு திரள்வதாலேயே தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் முதலாளித்துவத்தின் மக்கள் படுகொலை இயக்கத்தில் இருந்து தமது உயிரைப் பேணிக்கொள்ள போராட முடியும். தமது பிரதிநிதிகளை உள்ளடக்கிய நடவடிக்கைக் குழுக்களைக் கட்டி எழுப்பியவாறு அதன் தலைமையில் பாதுகாப்புக் குழுக்களை அமைப்பதன் மூலமே இது சாத்தியமாகும். இந்த விதத்தில் சுயாதீனமாக அணிதிரண்டால் மட்டுமே முதலாளிகளை நிராயுதபாணிகள் ஆக்க முடியும். தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினையும் எடுக்க வேண்டிய ஆக்கபூர்வமான நடவடிக்கையும் இவைதான். சோசலிச சமத்துவக் கட்சி இந்த விதத்தில் பொதுமக்களை நனவூட்டி ஆயுதபாணியாக்கப் போராடுகின்றது.

## சோசலிச சமத்துவக் கட்சிக்கு சேறடிக்க கீழ்த்தர முயற்சி

கடந்த பெப்ரவரி 26ம் திகதி யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நடாத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் 1980பதுகளில் யூ.என்.பி.அரசாங்கம் சகல அரசியல் கட்சிகளுக்கும் ஆயுதம் வழங்கியதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இது அப்பட்டமான பொய்யாகும். சோசலிச சமத்துவக் கட்சியும் அதன் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் யூ.என்.பி. அராசாங்கத்திடமிருந்தோ அல்லது வேறு எந்த ஒரு அரசாங்கத்திடம் இருந்தோ எந்த ஒரு ஆயுதத்தையும் பெறவில்லை என நாம் அழுத்தம் திருத்தமாகக் குறிப்பிடுகின்றோம்.

அரசியல் கட்சிகளுக்கு 5000 ஆயுதங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டதாகவும் "சகல அரசியல் கட்சிகளது கோரிக்கைக்கு இணங்கவே அது சம்பந்தமான பதிவுகள் பராமரிக்கப்படவில்லை" எனவும் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

யூ.என்.பி.க்கோ அல்லது வேறு முதலாளித்துவ முன்னணி அரசாங்கங்களுக்கோ முட்டுக் கொடுத்த இடதுசாரி வேஷதாரி பிற்போக்கு கட்சிகள் முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பாதுகாப்புக்காக ஆயுதம் பெற்றதும் அவற்றை பொது மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தியதும் சகலரும் அறிந்ததேயாகும்.

எனினும் முதலாளித்துவ அரசாங்கங்களுடன் சேர்ந்து தமது கைகளில் பூசிக்கொண்ட இரத்தத் தழும்புகளை புரட்சிக் கட்சியின் மேலிலும் பூசிவிட எடுக்கப்படும் இந்தக்கீழ்த்தரமான முயற்சியை நாம்-சோசலிச சமத்துவக் கட்சி வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

## 135 தமிழரைப் பலிகொண்ட துயரச் சம்பவம்...

1ம் பக்கத் தொடர்ச்சி

பிரசுரிப்பது தம்மை மூடிமறைப் பதற்கேயாகும். இரண்டு ஆண்டுகால பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் யுத்தமானது தமிழ் மக்களுக்கு பெரும் அழிவையே சிருட்டித்துள்ளது. யாழ்.குடா நாட்டிலும் கிளிநொச்சியிலுமான இராணுவ முற்றுகைகளால் அகதிகளான தமிழ் மக்களில் பெரும்பாலானோர் அரசாங்க பிரச்சார இயந்திரத்தின் செய்திகளில் நம்பிக்கை வைத்து திரும்பவும் தமது உறைவிடங்களுக்கு திரும்பிச் செல்லலாம் என்ற நம்பிக்கையுடனேயே வவுனியாவுக்கு ஓடினார்கள். தற்போது இம்மக்கள் வவுனியாவில் அகதி முகாம்கள் என்ற சித்திரவதை முகாம்களில் தள்ளப்பட்டுள்ளனர். முட்கம்பி வேலி, இராணுவ-பொலிஸ் காவல் கொண்ட முகாம்களில் இருந்து அவர்களால் வெளியேற முடியாது. பட்டினி, தாகம், சுகாதார வசதியின்மை, தொற்று நோய் கைப்பற்றிக் கொண்டுள்ளதாக அரசாங்கம் கூறிக்கொண்டுள்ள ஒரு நிலைமையில் இது இடம் பெறுகின்றது. இந்தப் படகு கவிழ்ந்ததும் இத்தகைய ஒரு சமயத்திலேயே. வவுனியாவில் இனவாத ஒடுக்குமுறைகளுக்கு இலக்காவதைக் காட்டிலும் இந்தியாவுக்கு ஓடிப்போவது நல்லது என விடுதலைப் புலிகள் பிரச்சாரம் செய்வதற்குக் காரணம் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதற்கேயாகும். இந்தத் துயரச் சம்பவம் விடுதலைப் புலிகளால் தமிழ் மக்கள் அழிவுப் பாதையில் தள்ளப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது.

வடக்கு-கிழக்கில் தமிழ் ஒடுக்கப்படும் மக்கள் எதிர்கொள்ளும் இந்த நிலைமைகளைப் பார்த்துக் கொண்டு தெற்கில் உள்ள தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் கண்மூடி மௌனிகளாக இருக்க முடியாது. தெற்குப்புற மக்களையும் சூழ்ந்துகொண்ட ஒரு நிலையிலேயே

www.padippakam.com

# செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்!

## புனர்வாழ்வு முகாமில் சந்திக்க அனுமதி வழங்க நீதிமன்றம் மறுப்பு


செல்லையா ராஜ்குமார்.

செல்லையா இராஜ்குமார் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டுள்ளதற்கு எதிராக சோசலிச சமத்துவக் கட்சி தாக்கல் செய்த மனுமீதான விசாரணை மார்ச் 26ம் திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது. கடந்த 19ம் திகதி மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது இராஜ்குமாருக்கு எதிரான குற்றச்சாட்டு என்ன என்பதை முன்வைக்க அரச தரப்பு சட்டத்தரணியினால் முடியாது போனதைத் தொடர்ந்தே வழக்கு விசாரணை பின்போடபபட்டது. அத்தோடு இராஜ்குமாரை புனர்வாழ்வு முகாமில் சந்திக்க அனுமதி கோரி சோ.ச.க.சமர்ப்பித்த விண்ணப்பமும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் நிராகரிக்கப்பட்டது. இராஜ்குமாரை சந்திக்க கட்சி மத்திய குழு உறுப்பினரான நந்த விக்கிரமசிங்க மனு ஒன்றையும் சமர்ப்பித்துள்ளார் என சோ.ச.க.சார்பில் ஆஜரான சட்டத்தரணி கூறியபோது அது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரிடம் விண்ணப்பிக்க வேண்டும் என நீதிபதி தெரிவித்தார்.

இதன் அர்ததம் என்ன? இராஜ்குமாரை கைது செய்து அடைத்து வைத்துள்ள புனர்வாழ்வு திணைக்கள அதிகாரிகள் அவரைக் கைது செய்ததும் அடைத்து வைத்ததும் சரியென நிரூபிக்கும் அவசியம் கொண்டவர்கள் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. அனுமதி கோரி திணைக்களத்துக்குச் செய்து கொண்ட விண்ணப்பத்துக்கு இரண்டு மாதங்கள் கழிந்தும் கூட இன்னமும் பதில் கிடைக்க இல்லை.

கடந்த பெப்ரவரி 21ம் திகதியுடன் இராஜ்குமார் கைது செய்யப்பட்டு 233 நாட்கள் கழிந்து விட்டன. அவரைச் சந்தித்துப்பேச அவரது அரசியல் கட்சியான சோசலிச சமத்துவக் கட்சிக்கு உள்ள உரிமை பறிக்கப்பட்டு 78 நாட்கள் ஆகிறது. ஆளும் வர்க்கமானது இந்த நீண்ட காலகட்டத்தினுள் தாக்குதல், மிரட்டல், ஆத்திரமூட்டல் மூலம் இந்த இளம் சோஷலிஸ்டின் மனோதைரியத்தை தகர்த்துவிடலாம் என மனப்பால் குடிக்கின்றது.

இதே சமயம் இராஜ்குமாரின் மனைவியான விஜிதாவை புனர்வாழ்வு முகாமுக்கு கூட்டிச் சென்று இராஜ் குமாருடன் தங்கவைக்க அதிகாரிகள் செயற்பட்டுள்ளனர். இதனால் ஏற்படப் போகும் பயங்கர நிலைமைகளையிட்டோ அல்லது ஆளும் வர்க்கத் தயாரிப்பின் அர்த்தம் பற்றியோ அவர் தனது கட்சியுடன் கலந்துரையாட உள்ள உரிமை மறுக்கப்பட்டுள்ளது. அத்தகைய ஒரு நிலையில் எடுக்கப்பட்டுள்ள இந்நடவடிக்கை ஒரு கொடிய ஆத்திரமூட்டல் தயாரிப்பாகும் என நாம் எச்சரிக்கின்றோம்.

இராஜ்குமாருக்கு எதிரான குற்றச்சாட்டு என்ன? இது இன்னமும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை. பொதுஜன முன்னணி அரசாங்கம், சோசலிச சமத்துவக் கட்சி இராஜ்குமார் தனது உறுப்பினர் என அத்தாட்சிப்படுத்தியும் கூட அவர் கடந்த 7மாதங்களாக கைதுசெய்து தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இது சோ.ச.க.வுக்கு எதிரான திட்டமிட்ட தாக்குதலாகும்.

இந்த அடிப்படையில் அரசியல் நிலைமை நன்கு தெளிவாகி உள்ளது. முதலாளித்துவ யூ.என்.பி. பொதுஜன முன்னணி, ஜே.வீ.பி, விடுதலைப் புலிகள், மட்டுமல்ல முதலாளி வர்க்கத்துடன் இணைந்து கொண்டுள்ள சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சி போன்றவையும் பொதுமக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளமை நாளாந்தம் நிரூபிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் சோசலிச சமத்துவக் கட்சியின் பக்கம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் கவனம் திரும்புவதையிட்டு ஆளும் வர்க்கம் குழம்பிப்போயுள்ளது. எனவே செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்யும் பிரச்சாரம் முன்னெடுக்கப்படுவதும் தீவிரமாக்கப்படுவதும் அவசியம்.

# மத்திய வங்கி தமிழ் பெண் ஊழியர் கைது

கடந்த பெப்ரவரி 7ம் திகதி கொழும்பு சிற்றம்பலம் ஏ.கார்டினர் மாவத்தவில் உள்ள இலங்கை விமானப்படை காவல் அரண் அருகில் கைது செய்யப்பட்ட மத்திய வங்கி தமிழ் பெண் ஊழியர் ஏழு தினங்களாகத் தொடர்ந்து பொய்க் குற்றச்சாட்டின் பேரில் தடுத்து வைக்கப்பட்டு , பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்.

15 மாதக் குழந்தையின் தாயாரான இவர் சம்பவ தினத்தன்று வழக்கம் போல் வேலைக்குச் சென்று கொண்டிருக்கையில் அவரது அடையாள அட்டை இராணுவத் தினரால் பரீட்சிக்கப்பட்டது. தேசிய அடையாள அட்டை இலக்கமும் மத்திய வங்கி அடையாள அட்டை இலக்கம், பிறந்த வருடம், பெயர் என்பன வேறுபாடுவதாகக் கூறி விசாரிக்கப்பட்டார். பிறந்த திகதி வேறுபாடு மத்திய வங்கியின் தவறினால் ஏற்பட்டதாயும், பெயர் வேறுபாடு திருமணத்துக்கு முன்னர் தே.அ.அ. வழங்கப்பட்டதால் எழுந்தது எனவும் அவர் விளக்கினார். இதன் பேரில் அவர் மத்திய வங்கியின் சம்பந்தப்பட்ட கிளையின் தொலைபேசி இலக்கத்தையும் கொடுத்தார். எனினும் இராணுவத்தினர் இந்த விளக்கத்தை ஏற்க மறுத்து , அவரை கொம்பனித்தெரு பொலிசில் ஒப்படைத்தனர்.

பிற்பகல் 1 மணிவரை எந்தவிதமான விசாரணையும் இல்லாமல் பொலிசில் தங்க வைக்கப்பட்ட அவர் மத்திய வங்கி அடையாள அட்டை வேறுபாடு சம்பந்தமாக வங்கியினால் வழங்கப்பட்ட கடிதத்தை கையளித்தும் அவரை விடுதலை செய்ய மறுத்துவிட்டனர். அவருக்கு எதிராக வங்கியில் இருந்து முறைப்பாடு கிடைத்துள்ளதாகவும் அவரை இரகசியப் பொலிசார் விசாரிக்க வேண்டு ..ள்ளதாகவும்

சமத்துவக் கட்சி அங்கத்தவர் ஜெரானி ரத்னாயக்காவினால் எழுப்பப்பட்டதோடு சங்கம் உடனடியாக அவரை விடுதலை செய்யத் தலையிட வேண்டும் என வேண்டினார். இதற்கு சங்கத் தலைவர் அந்திராதி அவர் அடையாள அட்டை பிரச்சினையால் கைது செய்யப்பட்டிருப்பின் (தலையிடுவதில் ) பிரச்சினை இல்லை. அப்படி இல்லாமல் வேறு காரணம் உண்டோ எனக்கூறி இந்தக் கைது செய்தலையும் தடுத்துவைப்பையும் நியாயப்படுத்தினார்.

கடந்த ஆண்டு ஜனவரி 31ம் திகதி விடுதலைப் புலிகள் மத்திய வங்கி மீது தாக்குதல் நடாத்திய அன்று இப்பெண் ஊழியர் சேவைக்கு வராது இருந்ததை பற்றி இரகசியப் பொலிசார் விசாரித்தனர். அத்தோடு அவுஸ்திரேலியாவிலுள்ள அவரின் நண்பியுடன் அவர் கொண்டுள்ள தபால் தொடர்புகள் பற்றியும் அவர்கள் விசாரித்தனர். இவை எல்லாம் அவருக்கு எதிராக வங்கியில் இருந்து சென்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இந்த வேட்டையும் விசாரணையும் இடம்பெற்றதைக் காட்டின.

அவரை விடுதலைப் புலிகளுடன் தொடர்புபடுத்த எடுத்த முயற்சி தோல்வி கண்டதாலும் மத்திய வங்கி பொதுச் செயலாளரும் சோ.ச.க அங்கத்தவருமான எச்.எம்.பி.ஹேரத் செய்த தலையீட்டாலும் பொலிசார் ஏழுநாட்களின் பின் நீதிமன்றத்தில் நிறுத்தி விடுதலை செய்ய நேரிட்டது. இந்த ஏழு நாள் தடுப்புக்காவலினாலும் சிறையினாலும் அவர் உள, உடல் ரீதியில் சித்திரவதைகளுக்கு உள்ளானார். இன்று தமிழ் ஊழியருக்கு எதிரான இனவாத வேட்டைகளுக்காக அரச படைகளுக்கு மொட்டைக் கடிதம் அனுப்பும்

# இலவசக் கல்வியைப் பேண அணிதிரள்வோம்


பெப்ரவரி 16ம் திகதி கொழும்பு சாரணர் சங்க தலைமையக மண்டபத்தில் இடம்பெற்ற இலவசக் கல்வி பேணும் நடவடிக்கைக் குழு கூட்டம்

இலவசக் கல்வி பேணும் நடவடிக்கைக் குழுக்களின் ஒருங்கிணைந்த கூட்டம் கடந்த பெப்ரவரி 16ம் திகதி கொழும்பு சாரணர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதற்கு 70க்கும் அதிகமானோர் வருகை தந்திருந்தனர். இந்த நடவடிக்கைக் குழுக்கள் சோசலிச சமத்துவக் கட்சியினால் ஏற்பாடு செய்யப்பட்டவை.

ஆசிரியர், மாணவர், பெற்றோர் உட்பட பலர் இக்கூட்டத்தில் தமது கருத்துக்களை வழங்கினர். கொழும்பு, பண்டாரவளை, வெல்லம்பிட்டி, கதிர்காமம், மொனராகலை, அம்பலாங்கொடை, தோட்டத்துறை முதலிய பகுதிகளில் கல்வி வெட்டு இடம்பெறும் விதம் பற்றியும் பல்கலைக் கழகங்களில் தோன்றியுள்ள பெரும் பிரச்சினைகள் பற்றியும் இக்கூட்டத்தில் எடுத்துரைக்கப்பட்டது.

இக்கூட்டத்திற்கு சோசலிச சமத்துவக் கட்சியின் மத்திய குழு உறுப்பினரான ... உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்.விலானி பீரிஸ், இணைச் செயலாளர்கள்: ஹர்ஷ விஜேபால, எஸ்.கே.கீர்த்தி, அமைப்பாளர். பானினி விஜேசிரிவர்தன பொருளாளர்.நாத்

கூட்டத்தில் பின்வரும் முக்கிய பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டன.

×சகல மாணவர்களுக்கும் சமமான கல்வியை வழங்குவது

×மாணவர்களிடம் பணம் அறிவிடுவதை நிறுத்துவது

×ஆரம்ப வகுப்பு தொடக்கம் பல்கலைக் கழகம் வரை இலவசக் கல்வி

×16வயதுவரை சகல மாணவர்களுக்கும் கட்டாயக் கல்வி

×மாணவர்களுக்கு இலவச மதிய போசனம்

×ஆசிரியர் பற்றாக்குறையை போக்குவது

×ஆசியரியத் தொழிலின் சகல உரிமைகளையும் பேணுதல்

படிப்பகம்

www.padippakam.com



# ீட்டர் கெனமன்

## 55 வருடகால எதிர்ப்புரட்சி அரசியல்



நந்த விக்கிரமசிங்க

55ஆண்டுகளுக்கு மேலாக தொழிலாளர் ர்க்கத்துக்கு எதிரான ஒரு ஸ்டாலினிச தலாளித்துவ ஏஜன்டாகச் சேவையாற்றிய ற்றர் கெனமன் கடந்த ஜனவரி 23ம் திகதி ாலமானார்.

பீற்றர் கெனமன் இளைஞனாக டாலினிச இயக்கத்தில் சேர்ந்தது 930பதுகளின் மாபெரும் ஸ்டாலினிச திர்ப்புரட்சி பயங்கரங்களின் போதாகும். இந்தப் பயங்கரங்களின் போது போல்ஷிவிக் ட்சியின் 10 இலட்சத்துக்கும் அதிகமான அங்கத்தவர்களும் 15 இலட்சத்துக்கும் அதிகமான சோவியத் யூனியன் த்திஜீவிகளும் தொழிலாளர்களும் ஜோசப் ஸ்டாலினால் கொன்று தள்ளப்பட்டனர். இந்த இரத்தக் களரியின் இரத்த வெடிலுக்கு மத்தியிலேயே கெனமன் ஸ்டாலினிச இயக்கத்தில் சேர்ந்தார்.

மனித இனத்தின் மாபெரும் தலையாக விளங்கிய போல்ஷிவிசத்துக்கு ஸ்டாலினிச எதிர்ப்புரட்சிக் காட்டுமிராண்டித்தனம் தொடுத்த கொலைகாரத் தாக்குதல்களை கெனமன் உள்ளடங்கலான கைக்கூலிகள் "உலகின் ஒரே சோசலிச அரசான சோவியத் அரசைக் காப்பதற்கு அவசியமான ஒரு நடவடிக்கையாகக் கூறியே நியாயப்படுத்திக் கொண்டனர்."

ஆனால் கெனமன் மரணத்தைத் தழுவிக் கொள்வதற்கு முன்னதாகவே அவரால் வழிபாடு செய்யப்பட்ட ஸ்டாலினிசத் தலைவர்களால் சோவியத் யூனியன் வீழ்ச்சிகாணச் செய்யப்பட்டு உத்தியோகபூர்வமாகக் கலைத்துவிடப்பட்டதை தரிசிக்க மட்டுமல்ல அந்தப் பேரழிவின் நடைமுறைப் பங்காளர் என்ற விதத்தில் சோவியத் யூனியனின் புதைகுழிக்குள் வாய்க்கரிசி போடும் பாக்கியத்தையும் அவர் பெற்றுக்கொண்டார்.

இருபதாம் நூற்றாண்டின் அரைவாசிக்கு மேற்பட்ட காலம் எதிர்ப்புரட்சி ஸ்டாலினிசம் ஆற்றிய கம்யூனிஸ்ட் எதிர்ப்பு நடவடிக்கைகளின் சகல துறைகளிலும் கெனமன் ஆர்வத்துடன் பங்குகொண்டார். அவரது மரணச் சடங்குகளில் முதலாளித்துவ பொதுஜன முன்னணித் தலைவி, அமைச்சர்கள் மட்டுமன்றி முதலாளித்துவ யூ.என்.பி.யினதும் பிற்போக்கு தமிழ் முதலாளித்துவக் கட்சிகளதும் லங்கா சமசமாஜக் கட்சியினதும் முன்னணித் தலைவர்களும் கலந்து கொண்டனர். இது அவர் தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிராக ஆற்றிய கடைகெட்ட நடவடிக்கைகளுக்கு ஆற்றிய ஒரு நன்றிக் கடனாக விளங்கியது.

1942ல் பீட்டர் கெனமனால் எழுதப்பட்ட *The Soviet Way* என்ற நூலின் 15 பக்கங்கங்கள் மாஸ்கோ பொய் வழக்குகளைக் காப்பதற்கென ஒதுக்கப்பட்டிருந்தது. அதில் லெனினின் சகாக்களான சிநோவியேவ், கமனேவ், புகாரின் உட்பட பலர் நாஸி ஏஜன்டுகள் என சேறடிக்கப்பட்டு , கொலை செய்யப்பட்டதை எதிர்த்தவர்களை "பாசிச ஏஜன்டுகள் ஒழிக்கப்பட்ட காம்பீரத்தை(!) பற்றி கண்ணீர் வடிப்போர்." என அழைத்தது. லியொன் ட்ரொட்ஸ்கி ஸ்டாலினால் சதி செய்யப்பட்டுக் கொலையுண்ட சம்பவத்தை அன்றைய இலங்கை ஸ்டாலினிஸ்டுகளின் பத்திரிகையான நவசக்தி பின்வருமாறு குறிப்பிட்டது: "சோவியத் ரூஷ்யாவையும் உலகப் புரட்சியின் தலைவரான ஜோசப்



மாஸ்கோ வீதியில் பிச்சை எடுக்கும் ரூஷ்ய மூதாட்டி

கட்சி என்ற பேரில் (பின்னர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி) அழைக்கப்பட்ட இந்த அமைப்பின் செயலாளரான இவர் லங்கா சமசமாஜக் சட்சியை ஒழித்துக்கட்டும் கடைகெட்ட திட்டத்தையும் தொடுத்தார்.

### நாசிகளுக்கும் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் வழங்கிய ஆதரவு

ஹிட்லர்-ஸ்டாலின் உடன்படிக்கை நடைமுறையில் இருந்த 1939 41 வரை நாஸிகளுக்கு ஆதரவு வழங்கிய கெனமன் கும்பல், ஹிட்லர் சோவியத் யூனியனை ஆக்கிரமித்ததில் இருந்து -1941ஜூன்22- பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் உளவாழியாகச் செயற்பட்டு, தொழிலாளர் வர்க்கப் போராட்டங்களையும் அன்று அதன் நனவான தலைமையாகவும் விளங்கிய லங்கா சமசமாஜக் கட்சியையும் நாசமாக்கத் தன்னால் முடிந்த சகலதையும் கெனமன் செய்தார். இரண்டாம் உலக யுத்த காலத்தில் இலங்கைச் சிறைகளில் இருந்து தப்பி ஓடி இந்தியாவினுள் தொழிலாளர் வர்க்கத்துக்குப் புரட்சிகர தலைமை வழங்கப் போராடிய இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியின் தலைவர்களை ஏகாதிபத்தியப் பொலிசாரிடம் பிடித்துக் கொடுத்த குல்கார்னி கெனமனின் சகா ஆவார்.

தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனத்துக்காகப் போராடியவர்களுக்கு எதிரான இந்தத் துரோக நடவடிக்கையை ஸ்டாலினிஸ்டுகள் ஸ்டாலினின் "தனிநாட்டில் சோசலிசம்" என்ற கோட்பாட்டின் அடிப்படையில் நியாயப்படுத்தினர்.

### இதன்படி 1943ல் கெனமன்

உள்ளங்கலான ஸ்டாலினிஸ்டுகள் ஜே.ஆர்.ஜயவர்தனா உட்பட்ட முதலாளிகளின் உதவியோடு ஜாதிக சங்கத்தில் நுழைந்து கொண்டனர். 1946ல்

கூறி தொழிலாளர் வர்க்கத்தை ஏமாற்றுவதில் கெனமன் முன்னணியில் நின்றார்.

முதலாளித்துவ யூ.என்.பி.க்கு எதிராக 1953ல் வெடித்த ஹர்த்தாலை ஒரு நாள் எதிர்ப்பு இயக்கமாகக காற்கட்டு போடவும் அந்தஹர்த்தாலின் பின் அணிதிரண்ட வெகுஜன இயக்கத்தின் மீது சொலமன் டயஸ் பண்டாரநாயக்கவினை ஏற்றவும் 1956ல் அவரை ஆட்சிக்குக் கொணரவும் தோள் கொடுத்த கெனமன் பின்னர் பண்டாரநாயக்க தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களுக்கு தொடுத்த சகல தாக்குதல்களுக்கும் ஆதரவு வழங்கினார். பண்டாரநாயக்கவின் தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராக சமசமாஜக் கட்சி நடாத்திய இயக்கத்தை உடைத்து எறிய கெனமனின் கமயூனிஸ்ட் கட்சி ஆற்றிய துரோகச் சேவை இதற்கு எல்லாம் கொய்யகம் வைத்தது போல் உள்ளது. 1958ல் பண்டாரநாயக்க பொதுஜன பாதுகாப்பு மசோதாவை கொணர்ந்த வேளையில் கெனமனும் அவரது கம்யூனிஸ்ட் கட்சியும் அதற்கு ஆதரவு வழங்கின.

1964ல் சமசமாஜக் கட்சி ட்ரொட்ஸ்கிசத்தை வெளிவெளியாகக் காட்டிக்கொடுத்து கைவிட்டுவிட்டு முதலாளித்துவ சி.ல.சு.க.வுடன் கூட்டரசாங்கத்துள் நுழைந்து கொண்டமை கெனமனின் அரசியல் போக்குக்கு கிடைத்த ஒரு வெற்றியாகியது. இந்த விதத்தில் தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன வர்க்க அமைப்பை நாசமாக்கியதன் பின்னர் அந்தக் கூட்டரசாங்கத்தினால் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக திணிக்கப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்திற்கு கெனமனின் பூரண ஆதரவு கிடைத்தது. 1965ல் ஆட்சிக்கு வந்த யூ.என்.பி.அரசாங்கத்தைப் பலப்படுத்தி , தொழிலாளர் வர்க்கத்தைக் கூறுபோட்டு, தொழிற்சங்க சிங்கள இனவாதத்துக்கு கீழ்ப்படுத்தி வைக்கத் தொழிற்பட்ட கெனமன் 1968 பொது வேலைநிறுத்தத்தினை தவிடுபொடியாக்கி, 1970ல் சி.ல.சு.க.வுடனான கூட்டரசாங்கத்தில் அமைச்சர் பதவியை பொறுப்பேற்றார். 1971 ஏப்பிரல் இளைஞர் கிளர்ச்சி காலத்தில்

கூட்டரசாங்கத்தில் இருந்து வெளியே தள்ளப்பட்ட ஒரு நிலையில் அக்கட்சியின் ஊர்வலத்தை தடைசெய்து , ஊரடங்கு சட்டம் பிறப்பிப்பதற்கு வாய்ப்பாகச் சிறிமாவோ பண்டாரநாயக்கவின் கையைப் பலப்படுத்தியது பீட்டர் கெனமனும் அவரின் ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியுமே.

கூட்டரசாங்கத்தினுள் கம்யூனிச, சமசமாஜக் கட்சிகள் ஆற்றிய கைங்கரியங்கள் 1977ல் யூ.என்.பி.யை ஆட்சிப்பீடத்துக்குக் கொணர்ந்தது. இதைத் தொடர்ந்து யூ.என்.பி.அரசாங்கம் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவத் தாக்குதல்களை உக்கிரமாக்கியது தான் தாமதம் கெனமன் தலைமையிலான ஸ்டாலினிஸ்டுகள் ல.ச.ச.க., ந.ச.ச.க., பப்லோவாதிகள் ஆதரவோடு யூ.என்.பி.க்கு எதிரான தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் எதிர்த்தாக்குதலை மழுங்கடித்தனர். 1980 வேலைநிறுத்தத்தில் தொழிலாளர் வர்க்கத்தை அரசியல் ரீதியில் நிராயுதபாணியாக்கி குண்டர் பலத்தை கட்டவிழ்த்து விடவும், ஒரு இலட்சம் தொழிலாளர்களை வேலைநீக்கம் செய்யவும் சமசமாஜ, நவசமசமாஜ தலைவர்களுடன் சேர்ந்து யூ.என்.பி.க்கு வழிசமைத்துக் கொடுத்த கெனமன் 1983 இனவாத பயங்கரத்தினுள்- கம்யூனிஸ்ட் கட்சி தடைசெய்யப்பட்டு இருந்த நிலையிலும் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைக்கு எதிராகக் கொணரப்பட்ட யூ.என்.பி.யின் ஆறாவது அரசியலமைப்புச் சட்டத் திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களிக்கும்படி பாராளுமன்றத்தில் இருந்த தனது ஏக உறுப்பினரையும் வழிநடாத்தினார்.

1985ல் யூ.என்.பி.அரசாங்கத்தின் இராணுவம் பெரும் இராணுவ பின்னடைவுகளுக்கு உள்ளாகி இருந்த ஒரு நிலையில் எழுச்சிகண்டுவந்த தொழிலாளர் போராட்டங்களைத் தவிர்க்கும் பொருட்டு சமசமாஜ-நவசமசமாஜ கட்சிகளுடன் சேர்ந்து கொண்ட கெனமன் 1987ல் ஏகாதிபத்தியவாதிகளுடனும் இந்திய முதலாளிகளுடனும் இலங்கை முதலாளிகளுடனும் சேர்ந்து இந்திய-இலங்கை உடன்படிக்கைக்கு இணங்க வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு இந்திய முதலாளித்துவ இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆதரவு வழங்கினார். இதனால் தென் மாகாணங்களுக்கு திருப்பியழைக்கப்பட்ட இலங்கை இராணுவம் ஆயிரமாயிரம் ஒடுக்கப்படும் இளைஞர்களை சுட்டெரிப்பதில் ஈடுபட்ட சமயத்தில் கெனமனின் கம்யூனிஸ்ட் கட்சி அப்பட்டமான பொலிஸ் உளவாழியாகச் செயற்பட்டது.

சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ கட்சிகளின் துரோகத்தின் பெறுபேறாக ஜே.வீ.பி.பாசிச இயக்கம் கட்டவிழ்த்து விடப்பட்ட வேளையிலும்-அதனால் தமது நெருங்கிய சகாவும் க.க. இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவருமான எல்.டபிள்யூ.பண்டித கொலைசெய்யப்பட்ட நிலையிலும்

www.padippakam.com

# ஹிட்லர் ஆட்சிக் காலத்தை விட ஜேர்மனியில் வேலையின்மை உக்கிரம்

1997 ஜனவரி மாதத்தில் 5 இலட்சத்துக்கும் அதிகமான ஜேர்மன் தொழிலாளர்கள் வேலைகளை இழந்துள்ளனர். இதன் மூலம் ஹிட்லர் ஆட்சிக்கு வந்த 1933ன் பின்னர் வேலையில்லாத் திண்டாட்டத்தின் மட்டம் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

1930பதுகளின் வேலையில்லாத் திண்டாட்ட நெருக்கடியை போலல்லாது இன்றைய வரலாற்று அதிகரிப்பானது வங்கிகளதும் பங்குமுதல் சந்தைகளதும் வீழ்ச்சியினால் தூண்டிவிடப்பட்ட ஒரு உலகளாவிய பொருளாதார மந்தத்தின் விளைவு அல்ல. அதற்கு மாறாக தொழிலாளர்கள் மேலும் மேலும் வேலையின்மை கியூக்களில் தள்ளப்பட்டு வரும் அதே சமயம் ஜேர்மன் பன்நாட்டுக் கம்பனிகள் என்றுமில்லாத அளவு இலாபத்தையும் உற்பத்தியையும் ஈட்டிக் கொண்டுள்ளன.

பெப்ரவரி 6ம் திகதி நுரம்பேன் சமஷ்டி தொழில் அலுவலகத்தினால் வெளியிடப்பட்ட புள்ளிவிபரங்களின்படி ஜனவரிக்கான வேலையற்றோர் தொகை 4.66மில்லியன். இது முன்னைய மாதங்களின் 510100 அதிகரிப்பைக் காட்டிலும் ஒரு பாய்ச்சலாகும். இது உத்தியோகபூர்வமான வேலையின்மை வீதத்தினை 12.2% ஆக்கியுள்ளது. அல்லது ஒவ்வொரு எட்டு ஜேர்மன் தொழிலாளர்களுக்கும் ஒரு தொழிலாளி வேலையின்றி உள்ளார். கிழக்கு ஜேர்மனியில் இந்த வீதம் முன்னைய மாதத்தின் 15.9வீதத்தில் இருந்து 18.7 வீதத்துக்கு பாய்ந்துள்ளது.

இந்தப் புள்ளிவிபரங்களை அறிவித்த தொழில் அலுவலக தலைவர் பெர்ண்னாட் ஜாகொட கடைசிப் புள்ளிவிபரங்கள் "பயமும் அதிர்ச்சியும்" தருபவையாக உள்ளன என்றுள்ளார். அவை அரசாங்கத்தின் மோசமான அச்சங்களையும் சகல நிபுணர்களின் மதிப்பீடுகளையும் தாண்டியுள்ளன என்றுள்ளார்.

பகுதிநேர வேலைகள் மூலமும் முன்கூட்டிய ஒய்வுத் திட்டங்கள் மூலமும் உயிரைப் பிடித்துக் கொள்ள முடிந்துள்ள 1.1 மில்லியன் தொழிலாளர்களையும் சேர்ப்பின் ஒரு தொழில் அல்லது ஒரு வாழ்க்கைக்கான ஊதியம் இல்லாத ஜேர்மன் தொழிலாளர் எண்ணிக்கை 7 மில்லியன்களை எட்டியுள்ளது.

## வேலையின்மை தொடர்ந்து அதிகரிக்கும்

உருக்கு ஆலைகளையும் கப்பல்கட்டும் நிலையங்களையும் மூடிவிடுவது பற்றிய பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன. இவை மற்றொரு 100,000 தொழில்களை ஒழித்துக் கட்டும். ஒரு முக்கிய அரசாங்கத் தொழில் திட்டத்தை இழுத்துமூடும் அரசாங்கத்தின் திட்டம் கிழக்கு ஜேர்மனியில் உடனடியாக 180,000 தொழிலாளர்களையும் மேற்கில் 60000 தொழிலாளர்களையும் வேலை இழக்கச் செய்யும்.

வரலாற்றில் முன்னொருபோதும் இல்லாத அளவிலான இந்த வேலையின்மை புள்ளிவிபரங்கள் ஹெல்மட் கோலின் ஆளும் கூட்டரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகவாதிகளுக்கும் (SDP) இடையே ஊமைக் குற்றச்சாட்டுக்களைத் தூண்டிவிட்டுள்ளது. கோல் அரசாங்கத்தின் கொள்கைகளே வேலையற்றோர் கியூக்கள் நீண்டுவருவதற்கு காரணம் என சமூக ஜனநாயகவாதிகள் குற்றம்சாட்டியுள்ளனர். அதேசமயம் கோல், சமூக ஜனநாயகவாதிகள் பொருளாதார "சீர்திருத்தங்களுக்கு" தடை போட்டதால் வேலை வாய்ப்புக்களை சிருஷ்டிக்கும் அரசாங்கத்தின் திட்டம் தடைப்பட்டுவிட்டதாக குற்றம்சாட்டியுள்ளார்.

கோலின் கிறிஸ்தவ ஜனநாயகக் கட்சியும் அதன் கூட்டரசாங்க பங்காளிகளும் 2000 ஆண்டளவில் ஜேர்மனியில் வேலையின்மையை அரைவாசியாகக் குறைக்க வாக்குறுதி அளித்திருந்தனர். இதனை ஓய்வூதியம், சுகவீன ஊதியம், சமூக நலன்புரித் திட்டத்தில் பெரும் வெட்டுக்களை அமுல் செய்வதன் மூலம் சாதிக்க முடியும் எனக் கூறி இருந்தனர். இதன்மூலம் தொழிலாளர் செலவீனத்தை வெட்டி, முதலீட்டுக்களை அதிகரிக்க முடியும் என்றனர். இதற்கு மேலாக அரசாங்கம் செல்வந்தர்களுக்கும் பெரும் கூட்டுத்தாபனங்களுக்கும் பெரும் வரிச்சலுகைகளை வழங்க பிரேரித்துள்ளது. இந்நடவடிக்கைகள் "அமெரிக்க தீர்வு" என வருணிக்கப்பட்டுள்ளன. இந்தச் சுரண்டல் மட்டத்தினதும் வறுமையினதும் அறிமுகம் இன்று அமெரிக்காவில் இருந்துவரும் மட்டத்துடன் ஒப்பிடத்தக்கது எனக் கூறப்படுகின்றது.

மோட்டார் வாகன இராட்சத கம்பனிகளான டெயிம்லர்-பென்ஸ் அரசாங்க அங்கீகாரம் பெற்ற "சிக்பே" வெட்டை கடந்த ஆண்டு அமுல் செய்ய எடுத்த முயற்சி பிரமாண்டமான வேலைநிறுத்தங்களை தூண்டிவிட்டது. ஜேர்மன் பன்னாட்டுக் கம்பனிகள் தொழிலாளர் எதிர்ப்புக்களுக்கு பதிலடியாக தமது உற்பத்தியின் பெரும் பங்கை நாட்டில் இருந்து வெளியே கொண்டு செல்ல முயன்றனர். குறிப்பாக கிழக்கு ஜேர்மனியில் ஸ்டாலினிச ஆட்சிகு உட்பட்டிருந்த நாடுகளில் குறைந்த சம்பளம் உள்ள இடங்களுக்கு மாற்ற முயன்றனர். 1995ல் ஜேர்மன் கம்பனிகளின் வெளிநாட்டு முதலீடு முன்னொரு போதும் இல்லாத விதத்தில் 45 பில்லியன் டாலர்களாக இரட்டித்தது. ஹங்கேரியிலான ஜேர்மன் கூட்டுக் கம்பனிகள் மட்டும் 6000க்கும் அதிகமாக வளர்ச்சி கண்டுவிட்டன.

டெயிம்லர்-பென்ஸ், ஹோஸ்ட் மற்றும் பன்னாட்டுக் கம்பனிகள் ஜேர்மன் ஊழியர் படையை வெட்டிச் சரிப்பதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்ததானது ஜேர்மன் பங்குமுதல்சந்தையை உச்சக் கட்டத்துக்கு தள்ளியுள்ளது. வேலையில்லாத் திண்டாட்டத்தின் வரலாற்று மட்டம் பற்றிய புள்ளிவிபரங்கள் பங்கு விலைகளை புதிய கட்டத்துக்கு அதிகரிக்கச் செய்தது. பிராங்பேட் பங்குமுதல் சந்தையில் காணப்பட்ட குதூகலத்துக்கு அடிப்படையாக வேலையில்லாத் திண்டாட்டத்தின் அதிகரித்த வளர்ச்சியை ஜேர்மன் தொழிலாளர்களின் சம்பளங்களையும் வேலை நிலைமைகளையும் வெட்டிச் சரிக்க பயன்படுத்த முடியும் என்பது விளக்கியது.

## பிரான்சில் போக்குவரத்து தொழிலாளர் வேலைநிறுத்தம்

புகையிரத, அரசாங்க போக்குவரத்து தொழிலாளர்கள் ஒய்வூதிய திட்டத்தில் அபிவிருத்தி வேண்டுமெனவும் வலதுசாரி அரசாங்கத்தின் தொழில் வெட்டினை நிறுத்துமாறும் கோரி ஒரு தொகை வேலைநிறுத்தங்களில் ஈடுபட்டனர். ஜனவரி 24ம் திகதி ஐந்து தொழிற்சங்கங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் கூட்டாக 35 மணித்தியால நேர வேலையும் 55 வயதில் ஓய்வும் கோரி வேலைநிறுத்தம் செய்தனர்.

மார்செயில்ஸ் , போர்டெக்ஸ் , லியொன் போன்ற நகரங்களில் அரசாங்க போக்குவரத்து தொழிலாளர்கள் வேலைநிறுததம் செய்தனர். பாரிசில் மெட்ரோ போக்குவரத்து தொழிலாளர்களுக்கு 55வயதில் ஓய்வுபெறும் திட்டம் அமுலில் உள்ளதால் அவர்கள் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொள்ளவில்லை. டுலூசில் சாரதிகள் ஒரு டிப்போவை கைப்பற்றி 4நாட்கள் தம்பிடியில் வைத்திருந்தனர். கலகம் அடக்கும் பொலிசார் அவர்களை அப்புறப்படுத்தும் வரை இது அவர்களின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தது.

## பாலஸ்தீன சித்திரவதை மரணம்



பீ.எல்.ஓ. தலைவர் யசீர் அரபாத் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தானியாவுடன்

ஒரு பாலஸ்தீனிய சிறைக் கைதி நாபுலசில் யசீர் அரபாத்தின் பாலஸ்தீனிய பாதுகாப்பு அதிகாரிகளால் குறுக்குவிசாரணை செய்யப்படுகையில் சித்திரவதைக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளார். இந்த யூசெப் இஸ்மயில் அல்பாபா என்பவர் காஸா. மேற்குக் கரை பகுதிகளில் யசீர் அரபாத்தின் குட்டிஅரசுகள் அமைக்கப்பட்டதன் பின்னர் பீ.எல்.ஓ.கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட சிறைகளில் கொல்லப்பட்ட 12வது பாலஸ்தீனியர் ஆவார். சிறை மரணங்களும் பரந்த கைதுகளும் ஊழல்களும் பீ.எல்.ஓ. வுக்கு எதிரான எதிர்ப்பைத் தூண்டிவிட்டுள்ளது. ஆட்சிக்கு அரபாத் வந்ததில் இருந்து பொலிஸ் படை எண்ணிக்கை 20000 ஆக வீங்கியுள்ளது. இது 10 இலட்சம் மக்களைக் கொண்ட ஒரு பிராந்தியத்துக்கு ஒரு பெரும் படையாகும்.-

## செக்கோசலவாக்கியாவில் ஆசிரியர் வேலைநிறுத்தம்

## கிரீசில் பொது வேலைநிறுத்தம்

இலட்சக்கணக்கான கிரீஸ் தொழிலாளர்கள் ஜனவரி 23ம் திகதி பிரதமர் கொஸ்டாஸ் சிமிட்டியாவின் சிக்கன நடவடிக்கைகளை எதிர்த்து 24 மணித்தியால பொது வேலைநிறுத்தம் செய்தனர். இதனால் புகையிரதம், பஸ், விமான போக்குவரத்துக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன இந்த வேலைநிறுத்தத்தை நாட்டின் பெரிய தொழிற்சங்க சம்மேளனமான போபே ஜீ.எஸ்.ஈ.ஈ. ஏற்பாடு செய்திருந்தது. கட்டிடம், ஆடை உற்பத்தி, ஆஸ்பத்திரி மற்றும் அரசாங்க சேவைகளைச் சேர்ந்த தொழிலாளர்களும் இந்த வேலைநிறுத்தத்தில் கலந்து கொண்டனர். இதே சமயம் ஜனவரி 20ம் திகதி ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரி நாடளாவிய ரீதியில் வேலைநிறுத்தம் செய்தனர். இந்த வேலை நிறுத்தங்கள் அரசாங்கத்தின் புதிய வரவு செலவு திட்டம் தொழிலாளர்களுக்கு இருந்துவந்த பல வித வரி மானியங்களை நீக்கியதையும் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதையும் எதிர்ப்பதாக விளங்கியது.

## போர்த்துக்கல்லில் புகையிரத வேலைநிறுத்தம்

ஆயிரக்கணக்கான போர்த்துக்கல் புகையிரத தொழிலாளர்கள் கமினோ டீ போர்த்துக்கீஸ் என்ற அரச நிறுவனம் மறுசீரமைக்கப்படுவதற்கு எதிரான ஒருநாள் வேலைநிறுத்தத்தை நடாத்தினர். லிஸ்பனிலும் மற்றும் இடங்களிலும் பிரயாணிகள் போக்குவரத்து புகையிரத சேவைகள் பாதிக்கப்பட்டன. சமூக ஜனநாயக அரசாங்கம் கடந்த மாதம் அரசாங்கக் கட்டுப்பாட்டில் உள்ள நிறுவனம் இரண்டு தனியார் கம்பனிகளாகக் கூறுபோடப்படும் என அறிவித்திருந்தது.

## சீனாவில் பிரிவினைவாதிகள் படுகொலை

சீன ஸ்டாலினிச ஆட்சியாளர்கள் வடமேற்கு மாகாணமான சிங்சியாங்கில் 100 முஸ்லீம் பிரிவினைவாதிகளை படுகொலை செய்துள்ளது. பெப்ரவரி மாத தொடக்கத்தில் அங்கு இடம்பெற்ற இனக்கலவரங்களைத் தொடர்ந்தே இக்கொலை இடம் பெற்றுள்ளது. யின்னிங் நகரத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் 100 பேர் காயமடைந்தனர். இங்கு இளைஞர்கள் உயிகூர் இனக்குழுவுக்கு ஒரு தனியரசு கோரி போராடிவருகின்றனர். சீன இராணுவ பொலிஸ் யின்னிங் மாகாணத்தில் ஊரடங்கு சட்டத்தை அமுல் செய்துள்ளதோடு அயலில் உள்ள கஸாகிஷ்தானுடனான எல்லையையும் மூடியுள்ளது.துருக்கி நகரமான இஸ்தான்பூலில் சீன தூதரகத்துக்கு எதிரே ஒரு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. 300000க்கும் அதிகமான உயிகூர் இனக்குழு மக்கள்

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

பாகம்–1.

விஜே டயஸ்

ஒரு யுத்தத்துக்கான காரணங்களை யுத்தத் தீச்சுவாலைகளை மூழச்செய்த உடனடிக் காரணிகளைக் கொண்டு விளக்க முயல்வது எப்போதும் தவறான முடிவுகளுக்கே இட்டுச் செல்லும். பரந்த அளவிலான மக்களைப் பற்றிப் பிடித்த விதத்தில் யுத்தத் தீச்சுவாலைகள் வெடிப்பது நீண்டகாலமாக பொறிப்பறந்து வளர்ச்சி கண்டுவரும் தீப்பிளம்பை ஒத்ததாகும்.

சகல தீப்பொறிகளும் எங்கும் எப்போதும் ஒரே பணியை ஆற்றுவதில்லை. சில தணிந்துபோகலாம் அல்லது தணிக்கப்பட்டுவிடலாம். ஆனால் அவற்றின் சூட்டிலும் உத்வேகத்திலும் எழும் தீச்சுவாலைகள் யுத்தப்பிளம்புகளை தோற்றுவிப்பதில் வெற்றிகாணும். தொகை பண்பாக மாறுகின்றது. இயக்கவியல் விதி அங்கு செல்லுபடியாகின்றது.

தமிழர் விரோத இனவாத யுத்தம் 1983ல் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு 13 ஆயுதப் படையினரை வடக்கில் கொலை செய்ததால் ஆரம்பமானதாக இனவாதிகள் கூறிக் கொள்கின்றார்கள். லிபரல் முகமூடி போட்டுக் கொண்டுள்ள முதலாளித்துவக் கையாட்கள் இனவாத யுத்தம், 1983 கறுப்பு ஜூலையின் பெறுபேறு என்கிறார்கள்.

வரலாற்றாசிரியர்களாக வேஷம் போடுவோரும் இருசாரார். சிங்கள, தமிழ் தேசிய இனங்கள் இரண்டையும் சேர்ந்த அதில் ஓர் சாரார் யுத்தத்துக்கான காரணங்களை பிரித்தானிய ஆட்சிக்காலம் வரை நீடிக்கின்றனர். இதில் பலர் இனவாத விதிமுறைகளை நடைமுறைக்கிடுகையில் இந்நாட்டு பிற்போக்கு சிங்கள தமிழ் முதலாளிகளின் பொறுப்பை பூசி மெழுக முயற்சிக்கின்றனர். பிரித்தானியர்களின் "பிரித்தாழும்" விதிமுறை, சிங்கள தமிழ் முதலாளிகளின் ஆதரவும் ஒத்துழைப்பும் இல்லாமல் நடைமுறைக்கிடப்பட்ட ஒன்றல்ல. ஏகாதிபத்தியவாதிகளுக்கும் தேசிய முதலாளிகளுக்கும் இடையே இங்கு நிலவிய இருதரப்பு ஒத்துழைப்புக்குமான காரணம், அவரவர்களிடையே இருந்துவந்த கருத்து வேறுபாடுகளைக் காட்டிலும் அவர்கள் இரு சாராரும் இந்நாட்டு சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் ஐக்கியத்தையிட்டு கொண்டிருந்த பீதியும் எதிர்ப்பும் பிரபல்யம் அடைந்ததேயாகும். அது வர்க்க உறவு பற்றிய விடயமாகும்.

இரண்டாம் பிரிவைச் சேர்ந்த "வரலாற்றாசிரியர்கள்" 1948ன் பின்னைய யூ.என்.பி. -சி.ல.சு.க. அரசாங்கங்களின் இனவாதக் கொள்கையை யுத்தத்திற்கான காரணங்களாகக் காட்டுகின்றார்கள். இந்தப் பிரிவில் பெரும்பான்மையாக அடங்குவோர் இடதுசாரி வேஷம் போட்டுக் கொண்டுள்ள குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகள்.

1948ம் ஆண்டின் சுதந்திரம் எனப்படுவது தேசிய சுதந்திரத்துக்கும் தேசிய ஐக்கியத்துக்கும் எதிராக ஏகாதிபத்தியவாதிகளும் தேசிய முதலாளித்துவ ஆட்சியாளர்களும் ...

விதிமுறையைத் தோற்கடிக்கும் வல்லமை வாய்ந்த ஒரு அரசியல் சக்தி இருக்கவில்லையா? உண்மையிலேயே இருந்தது. இடதுசாரி வேஷம் போடும் தீவிரவாதிகள் அவ்வாறில்லை எனக் கூறுவது அவர்கள் பேணிக்கொள்ள முயலும் இடதுசாரி அரசியல் அமைப்புக்களின் வரலாற்றுக்கே காலால் எட்டி உதைவதாகும்.

இந்தச் சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் சிறப்பாக போல்ஷிவிக் லெனினிஸ்ட் சமசமாஜ கட்சியும், லங்கா சமசமாஜக் கட்சியும் யூ.என்.பி.-சி.ல.சு.க. முதலாளித்துவக் கட்சிகளுக்கும் சமரசவாத தமிழ் முதலாளித்துவக் கட்சிகளுக்கும் எதிராகத் தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுகின்றதும் வழநடாத்துகின்றதுமான முக்கிய அரசியல் சக்தியாக விளங்கின. 1953 ஹர்த்தால் போராட்டம் காட்டியதைப் போல அந்த இயக்கம் முதலாளித்துவ ஆட்சியை தூக்கிவீசும் வல்லமையைக் கொண்டிருந்தது. இந்த அரசியல் இயக்கத்தின் பிற்காலத் துரோக நடவடிக்கைகளுக்கும் இனவாத யுத்தத்துக்கும் இடையே நிலவும் உறவைக் கவனத்தில் கொள்ளாமல் முதலாளித்துவ அரசாங்கங்களின் இனவாத விதிமுறைகளைக் குற்றம் சாட்டுவதானது புறநிலை ரீதியிலும் முதலாளி வர்க்கம் சம்பந்தமாக பரிந்துரைக்கும் விதிமுறைகள் மூலமும் வரலாற்றை விளக்குவதாகும். அது வரலாறு அல்ல. அதன் திரிப்பு ஆகும்.

## அரசியல் கட்சிகளின் பணி

புறநிலை அபிவிருத்திகளினுள் அகநிலைக் காரணிகளாகச் செயற்படும் வர்க்கமயமான அரசியல் கட்சிகளும் இயக்கங்களும் திட்டவட்டமான பணிகளை இட்டு நிரப்புகின்றன. அந்தப் பணியை நோக்காது வரலாறு சம்பந்தமாக நிஜ புரிந்துணர்வைப் பெறமுடியாது. வரலாறு சம்பந்தமான அத்தகைய விளக்கங்கள் புறநிலை வாதத்தினால் அவமானம் செய்யப்பட்டவையாகும்.

சமசமாஜ ஸ்டாலினிசக் கட்சிகளின் காட்டிக் கொடுப்பு இல்லாது இருந்திருக்குமானால் 1948 ஏகாதிபத்தியச்சார்பு சதிக்கும் 1956 சி.ல.சு.க. இனவாத அரசியலுக்கும் முற்றுப்புள்ளி வைத்து, பிற்காலத்தில் மூண்ட இனவாத யுத்தத்தைத் தவிர்க்க இடம் இருக்க இல்லையா?அவ்வாறு இல்லை எனக் கூறுவது முதலாளித்துவ காட்டுமிராண்டித்தனத்துக்கு பதிலீடு இல்லை எனவும் முதலாளித்துவ ஆட்சியைத் தூக்கி வீசி, மனித இனத்தின் அமைதியான வாழ்க்கைக்கு வழியமைக்க இப்புவியில் இடமில்லை எனவும் கூறுவதாகும். 1940பதுகளிலும் 1950பதுகளிலும் அத்தகைய அமைதியான சமூக அமைப்புக்கு ...

மட்டுமன்றி 1970-75 முதலாளித்துவ கூட்டரசாங்க காலத்தில் அத்தகைய ஒரு முற்போக்குப் பதிலீட்டுக்காக சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடையே வளர்ச்சி கண்டுவந்த முயற்சிகளை முதலாளித்துவ அரச பலத்தைக் கொண்டு இரத்தத்தில் மூழ்கடிக்கும் பொல்லாக-முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தின் பங்காளி என்ற விதத்தில் சமசமாஜக் கட்சி மாறியது. இது 1970க்கு முன்னர் அகநிலைவாதிகளால் கண்டு கொள்ளமுடியாது போன 1964 ன் மாபெரும் காட்டிக்கொடுப்பின் நடைமுறைப் பாத்திரமாகும். எனவேதான் நாம் இனவாத யுத்தத்தின் வேர் அந்தக் காலப்பகுதியை நோக்கி வேரூன்றியுள்ளது எனச் சுட்டிக் காட்டுகின்றோம்.

1970 1977 காலத்தில் இருந்தவந்த முதலாளித்துவக் கூட்டரசாங்கம் மூலம் – சிறப்பாக 1972 தொடக்கம் அத்திவாரமிடப்பட்டு, யூ.என்.பி.யினால் அப்பட்டமான யுத்த மட்டத்துக்கு கட்டியெழுப்பப்பட்ட தமிழர் விரோத இனவாத யுத்தம் இன்று இரண்டாவது பொதுஜன முன்னணி கூட்டரசாங்கத்தின் கீழ் முன்னொருபோதும் இல்லாத காட்டுமிராண்டித்தனத்துடன் முன்னெடுக்கப்படுகின்றது. அன்று சிறிமாவோ பண்டாரநாயக்கவின் தலைமையில் இருந்த கூட்டரசாங்கத்துக்கு தோள்கொடுத்த சமசமாஜ ஸ்டாலினிசக் கட்சிகளின் தலைவர்கள் யூ.என்.பி.க்கு வழியமைத்துக் கொடுத்தது மட்டுமன்றி, யூ.என்.பி.அரசாங்கம் நடாத்திய இனவாத யுத்தத்துக்கும் செவிசாய்த்தனர் என்பதை அறியாதோர் கிடையாது. 1987ல் இந்திய இராணுவத்தை தருவித்து, தமிழ் பொதுமக்களை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்க யூ.என்.பி.அரசாங்கம் எடுத்த தீர்மானத்தினை அங்கீகரித்ததன் மூலம் இவர்கள் யூ.என்.பி.இனவாத யுத்தத்தின் இரத்தவெறி வக்கீல்களாகினர்.

தமிழ்ப் பொதுமக்களை யாழ்ப்பாணத்தில் இருந்து கிளிநொச்சிக்கும் , கிளிநொச்சியில் இருந்து வன்னி நோக்கியும் அங்கிருந்து வவுனியாவின் சித்திரவதை முகாம்களுக்கும் குடும்பத்தோடு கலைத்த இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபட்ட பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டு சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகள் மட்டுமல்லாது ஏனைய சகல குட்டி, முதலாளித்துவ கட்சிகளும், குழுக்களும் தோள் கொடுத்தன என்பது அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. நவசமசமாஜக் கட்சி, மலையக மக்கள் முன்னணி, ஜே.வீ.பி., ஜனதா மித்துரோவும் அவ்வாறே விடுதலைப் புலிகள் உட்பட்ட சகல தமிழ் முதலாளித்துவ அமைப்புகளும் சந்திரிகா குமாரணதுங்கவை ஜனாதிபதியாக்க தோள்கொடுத்தனர். இந்த அடிபணிவானது ஜனாதிபதி வேட்பாளரின் [illegible]ளத்தனங்களைக் காட்டிலும் அடிபணிந்தவர்களது அரசியல் ...

### யுத்தத்தின் பேரழிவு

தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தம் இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் கீழ் முன்னொரு போதும் இல்லாத அளவுக்கு உக்கிரம் கண்டதன் மூலம் சிங்கள-தமிழ் தேசிய இனங்களுக்கு உருவாக்கப்பட்டுள்ள பேரழிவு அளப்பரியது.

ஏகாதிபத்திய நாடுகளினுள்ளும் தொழிலாளர்களின் நலன்புரி சேவைகள் வெட்டப்பட்டு, சம்பள மட்டம் குறைக்கப்பட்டு ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் இலாப பொதியை நிரப்புவதற்காக தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது.உலகில் தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டுள்ள நவீன புரட்சிகர முன்னேற்றங்கள் தொழில்களில் இருந்து ஆயிரக் கணக்கானோரை தள்ளவும் மோசமான சுரண்டல்களுக்கு உள்ளாக்கவுமே பயன்படுத்தப்படுகின்றது. இதனால் முன்னொரு போதும் இல்லாத அளவில் சமூக சமத்துவமின்மை உருவாகியுள்ளது. அமெரிக்காவில் உள்ள நூற்றுக்கு இரண்டுவீதமான செல்வந்தர்கள் 40வீதமான ஏழைகள் பெறும் வருமானத்தைக் காட்டிலும் கூடுதலான செல்வத்தை கொண்டுள்ளார்கள். உலகின் பெரும் கோடீஸ்வரர்களில் 358 பேர் உலகின் 270 கோடி ஏழைமக்களின் வருமானத்தைக் காட்டிலும் கூடுதலான தொகையை செல்வமாகக் குவித்துக் கொண்டுள்ளதாக ஐ.நா.வின் 1996க்கான அறிக்கை குறிப்பிட்டுள்ளது.

மக்களின் வாழ்க்கையை துவம்சம் செய்யும் இந்த நிலைமைகளுக்கு எதிராக ஏகாதிபத்திய நாடுகளிலும் பின்தங்கிய

காட்டுமிராண்டித்தனத்தை நோக்கி மனித இனத்தினை தள்ளிச் செல்லும் ஒரு அமைப்பாகியுள்ளது. இந்த அழிவினை தொழில்நுட்பத்திலான நவீன அபிவிருத்திகள் மூலம் முன்னெடுத்துச் செல்கின்றதும் இலாப இலக்கில் அல்லாது மக்களின் அவசியங்களுக்காக உற்பத்தியையும் விநியோகத்தையும் சமூக சமத்துவத்தின் அடிப்படையில் நடாத்துகின்றதுமான ஒரு திட்டமிடப்பட்ட சோசலிச பொருளாதாரத்தினை ஏற்படுத்துவதன் மூலமே நிறுத்தமுடியும். இது தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலக சோசலிச வேலைத்திட்டமாகும். பூகோளமயமான பொருளாதாரத்தை முதலாளித்துவத்தின் கீழ் ஒன்றிணைக்கும் பேரில் பொதுஜன முன்னணி அரசாங்கமும் முதலாளி வர்க்கமும் கடைப்பிடிக்கும் அழிவுமிக்க வேலைத்திட்டங்களுக்கு எதிராக தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் முன்னுள்ள பதிலீடு, அனைத்துலக சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட வேலைத்திட்டம் மட்டுமே.

தேர்தல் நடைபெறும் உள்ளூராட்சி சபைகளின் வங்குரோத்தும் சீரழிவும் பழைய முதலாளித்துவ நலன்புரி அரச அமைப்பு உலகளாவிய ரீதியில் பொறிந்து வீழ்ச்சி கண்டதற்கு நல்ல சான்றாகும். சில காலங்களுக்கு முன்னர் இந்த உள்ளூராட்சி சபைகள் மாகாணங்களில் மக்களின் சேவைகளை பராமரிப்பதற்கான நிறுவனங்களாகவே இயங்கி வந்தன. பொதுமக்களின் குறைந்தபட்ச மட்டத்திலான சமூக சீர்திருத்தங்கள கூட இந்தச் சபைகளால் பறிக்கப்பட்டுவிட்டது. இன்று இந்த நிறுவனங்கள் முதலாளித்துவ

படிப்பகம்

www.padippakam.com

# சோசலிச சமத்துவக் கட்சியை வெற்றியீட்ட செய்வோம்!

ம் பக்கத் தொடர்ச்சி

பாதுமக்களை படுமிலேச்சமான ாக்குதல்களுக்கு பலிகடாக்கள் ஆக்கியதேயாகும்.

## ழைய கட்சிகளின் ீரழிவு

லங்கா சமசமாஜக் கட்சி 1964 ுதலாளித்துவ கூட்டரசாங்கத்துள் ுழைந்தது சி.ல.சு.க.வை தள்ளிக்கொண்டு சாசலிசத்துக்கு செல்லமுடியும் எனக் றியபடியேயேயாகும். இன்று அந்தக் ட்சி ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களை ிலங்கைக்குள் தருவிக்கும் அரசாங்கம் டாத்தும் சகல வகையான மக்கள் விரோத ுடுக்குமுறை வேலைத்திட்டங்களதும் ங்காளியாக உள்ளது . அவசரகாலச் ட்டத்துக்குப் பதிலாக பயங்கரவாத தடைச் ட்டத்தை நாட்டின் அன்றன்றாடைய ட்டமாக்கிக்கொண்டு மக்களை நசுக்க வண்டும் என சமசமாஜக் கட்சி யோசனை தரிவித்துள்ளது. "... கட்சியின் பதில் ஒரு ாகாணத்தில் பயங்கரவாத வேலைத்திட்டத்தை தொடுக்கையில் அத்தகைய ஒன்றை நடைமுறைப்படுத்த க்கிய தேசியக் கட்சிக் காலத்தில் ட்டமாக்கப்பட்ட பயங்கரவாதத் தடைச் ட்ட விதிமுறைகள் போதுமானவை". சமசமாஜய-ஆசிரியத் தலையங்கம்-1997 னவரி 23) அவசரகாலச் சட்டத்துக்கும் ில அரச நிறுவனங்களைத் னியார்மயமாக்குவதற்கும் தாம் எதிர்ப்பு ன லங்கா சமசமாஜக் கட்சி கூறிக் கொள்வது உண்மையில் மக்களின் கண்களில் மண் போடவேயாகும். இந்த அரசாங்கத்தின் சகல பிற்போக்கு வேலைத்திட்டங்களதும் ங்காளியாக செயற்படும் சமசமாஜக் கட்சி ஆளும் வர்க்கத்தின் இராணுவ சர்வாதிகாரத் திட்டங்களை அபிவிருத்தி செய்வதில் சேர்ந்து கொண்டுள்ளது.

ஸ்டாலினிச கம்யூனிஸ்ட் கட்சியின் நிலைப்பாடு அரசாங்கம் தொடர்பாக விமர்சனத்துடன் கூடிய ஆதரவை வழங்கிக் கொண்டுள்ளோம் என்று தன்னும் கூறிக்கொள்ளாது நடைமுறைக்கிடப்படும் ஏகாதிபத்தியச் சார்பு திட்டங்களுக்கு உறுதியான ஆதரவை வழங்குவதாக உள்ளது.

யூ.என்.பி.யுடன் இணைந்து நின்ற இ.தொ.கா. முதலாளித்துவத் தலைவர்களும், இ.தொ.கா.வில் இருந்து பிரிந்து மலையக மக்கள் முன்னணியை அமைத்த சந்திரசேகரன் உட்பட்ட தலைவர்களும் அவ்வாறே செல்லச்சாமியின் அமைப்பும் பொதுஜன முன்னணி அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், சேவை நிலைமைகள், ஜனநாயக உரிமைகளை துவம்சம் செய்யவும் தனியார்மயமாக்கவும் ஆதரவாக இணைந்து கொண்டுள்ளன.

நவசமசமாஜக் கட்சி பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர தோள்கொடுத்த ஒரு அமைப்பாகும். அந்தக் கட்சியை அமைக்க முன்நின்ற விக்கிரமபாகு கருணாரத்ன, வாசுதேவ நாணயக்கார 1970-77 கூட்டரசாங்கத்துக்கு சமசமாஜக் கட்சிக்குள் இருந்து கொண்டே முண்டு கொடுத்தனர். இக்கட்சியை அமைத்ததன் பின்னர் யூ.என்.பி. தொடர்பாகப் போலி விமர்சனங்களைத் தொடுத்துக்கொண்டே சி.ல.சு.க.வுடன் காதல் களியாட்டுக்களில் ஈடுபட்டனர். இவர்கள் 1986ல் ஜே.ஆர்.ஜயவர்தனா கூட்டிய வட்டமேசை மாநாட்டில் வம்பளந்தவர்கள். பொதுஜன முன்னணியை ஆட்சிக்குக் கொணர உதவிய ந.ச.ச.க. இன்று அது வெறுப்புக்கு இலக்காகி உள்ள ஒரு நிலைமையில் சி.ல.சு.க. பின் ஆசன, சமசமாஜ, கம்யூனிச, கட்சிகளதும் இன்னும் பல மாஜி. தீவிரவாதிகளதும் மிச்சசொச்சங்களையும் சேர்த்துக்கொண்டு "இடதுசாரி முன்னணி" என்ற பேரில் ஒரு பொறிக்கிடங்கை தோண்டத் துடிக்கின்றது. வடக்கில் பிரிவினைவாத தமிழீழ விடுதலைப் புலிகளின் முதலாளித்துவ அமைப்புக்கு ஆதரவு தரும் ந.ச.ச.க. தெற்கில் பிற்போக்கு சிங்கள இனவாத ஜே.வீ.பி.யுடன் தோள் கோர்த்துக் கொண்டுள்ளது.

ஜே.வீ.பி. 1960பதுகளில் கெரில்லாவாதத்தினை பற்றி போதித்துக் கொண்டு 1970 முதலாளித்துவ கூட்டரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர உதவியது. 1977ல் யூ.என்.பி.யை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டு உதவியளித்த இந்த அமைப்பு 1988ல் யூ.என்.பி. தலைவர் ஆர்.பிரேமதாசவுடன் இரகசிய கூட்டமைத்துக் கொண்டு பொதுமக்களுக்கு எதிரான பாசிசப் பயங்கரங்களைக் கட்டவிழ்த்துவிட்டது. 1994ல் ஜே.வீ.பி. பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரவும் சந்திரிகா குமாரதுங்கவை ஜனாதிபதி பீடத்தில் ஏற்றவும் துணைபோயிற்று. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக நடாத்தும் போராட்டங்களை "யூ.என்.பி. பிற்போக்குச் சதி" என நாமகரணம் செய்து தாக்குவதில் ஜே.வீ.பி.ஈடுபட்டுள்ளது. இதனை அது அரசாங்க பொய்ப் பிரச்சார இயக்கத்தின் ஊது குழலாகச் செய்கின்றது. "மூன்றாவது சக்தி" யை கட்டியெழுப்பும் பேரில் ஆட்சியில் உள்ள எந்த ஒரு முதலாளித்துவ அரசாங்கத்தினுள்ளும் செய்துகொள்ளும் தயாரிப்புக்களைப் பற்றி ஜே.வீ.பி. சமீபத்தில் அறிக்கை வெளியிட்டது: "தனிக் கட்சிகளுக்கு பெரும்பான்மைப் பலம் கிடைக்கும் வாய்ப்பு இந்த அமைப்பின் கீழ் மிகவும் குறைவு. முக்கிய இரண்டு முதலாளித்துவக் கட்சிகளான ஐ.தே.க., பொதுஜன முன்னணிகள் இடையே ஏதேனும் ஒரு நிறுவனத்தில் பிரதிநிதித்துவம் சமமாகப் பிரிந்துவிடும்போது அந்த நிறுவனத்தின் அதிகாரத்தை அமைப்பதற்கு மூன்றாவது சக்தியின் ஆதரவை அவர்கள் நாட நேரிடும். அங்கு மூன்றாம் சக்தி பாட்டாளி வர்க்க இயக்கமாக இருக்கமிடத்து இறுதியில் அதிகாரத்தை அமைப்பதை தீர்மானிக்கும் பலம் அதற்குக் கிடைப்பதை தவிர்க்க முடியாது."(நியமுவா-1997 பெப்ரவரி)

பிறப்பில் இருந்து இலங்கையின் சகல முதலாளித்துவக் கட்சிகளின் முன்னாலும் வயிறளந்த ஜே.வீ.பி. மக்களுக்கு எதிராக பாசிச பயங்கரத்தை கட்டவிழ்த்து விடும் அளவுக்கு நாற்றம் கண்டது. இன்று இந்த அமைப்பு முதலாளித்துவத்தினுள் வருங்காலத்துக்கான வெளிச்சத்தைக் காணாத இளைஞர்களைத் தமது பிற்போக்கு இயக்கத்தினுள் போட்டுக் கொள்வதற்காக மீண்டும் ஒரு த்டவை தாம் "பாட்டாளி வர்க்க" "மார்க்சிச கட்சி" என்ற மோசடி பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளது. இந்த அமைப்பு துடிப்பது ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளிகளதும் பாசிச ஈட்டியாகத் தொழிற்படுவதற்கேயாகும் என நாம் எந்தவிதமான சஞ்சலத்துக்கும் இடம்வைக்காது கூறிக்கொள்கின்றோம்.




## அன்று நாம் கூறியது

1994 பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையினுள் நாம் பின்வருமாறு குறிப்பிட்டோம்:

"உழைக்கும் மக்களே! ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளதும் அவர்களின் இடதுசாரி வேஷதாரி எடுபிடிகளதும் மோசடிகளால் ஏமாந்து போய்விடாதீர்கள். இந்த முதலாளித்துவ கட்சிகள் பொதுத் தேர்தலை பயன்படுத்தப் போவது மோசடி,பொய்கள், வாய்வீச்சுக்கள் மூலம் வழிதடுமாறிப் போன மத்தியதர வர்க்கப் பகுதியினரை தமது பக்கம் திரட்டிக்கொண்டு, ஆட்சியில் பாய்ந்து கொண்டு கொடிய தாக்குதல் மூலம் மீண்டும் பதட்டம் அடைந்துள்ள தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் மீது பாசிச தாக்குதலை கட்டவிழ்ப்பதற்காகும். அதன்மூலம் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் கொடிய சுரண்டலுக்கான நிலைமைகளை ஊர்ஜிதம் செய்வதாகும்.லங்கா சமசமாஜக் கட்சி, இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி, நவசமசமாஜக் கட்சி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முதலாளிகள் அந்தத் திட்டத்தின் பங்காளிகளாவர்."

அவ்வாறே பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் பு.க.க.வெளியிட்ட அரசியல் குழு அறிக்கையில் நாம் புதிய அரசாங்கத்தின் பாத்திரம் பற்றி பின்வருமாறு குறிப்பிட்டிருந்தோம்:

"பொதுஜன முன்னணி ஆட்சிப் பீடம் ஏறியதன் மூலம் ஆட்சியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் மூலம் மக்களின் அவசியங்களில் எதுவும் நிறைவேற்றப்படாதது மட்டுமல்ல தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் ஒவ்வொரு பகுதியினருக்கும் சகல பக்கங்களில் இருந்தும் கடும் தாக்குதல் தொடுக்கப்படும் சகாப்தம் ஆரம்பமாகியுள்ளதாக புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் தீர்க்கமான முறையில் எச்சரிக்கை செய்கிறது." (கம்கறு மாவத்த-1994 ஆகஸ்ட் 22)

இந்த எச்சரிக்கை இன்று முழுமனே நிரூபிக்கப்பட்டுள்ளது. துரோகத் தலைவர்கள் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை மோசடி செய்ய செயற்பட்டனர் என்பது அந்தளவுக்கு தெளிவாகியுள்ளது.

## சோசலிச சமத்துவக் கட்சியின் தீர்வு வேலைத்திட்டம்

சோசலிச சமத்துவக் கட்சி சகல முதலாளித்துவ, குட்டி முதலாளித்துவ் கட்சிகளுக்கும் எதிராக தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்கள் சார்பில் பேசுகின்றது; போராடுகின்றது. கடந்த ஆண்டில் தோட்டத்துறையில், , இலங்கை மின்சாரசபையில், உருக்குக் கூட்டுத்தாபனத்தில் துறைமுகத்தில் மற்றும் தனியார் கைத்தொழில்களில் தொழிலாளர் போராட்டங்களுக்குக் கிளர்ந்தமையானது தமது உரிமைகள் பிடுங்கப்படும் வரை வாய்மூடி மெளனியாகப் பார்த்துக் கொண்டிருக்கத் தாம் தயார் இல்லை என்பதை அவர்கள் காட்டிக்கொண்டனர். எனினும் அவர்கள் முகம் கொடுத்த பிரச்சினை தலைமையும் வேலைத்திட்டமும் இல்லாத பிரச்சினையாகும். ஏழை விவசாயிகளும் இளைஞர்களும் அத்தகைய பிரச்சினைக்கே முகம் கொடுக்கின்றனர். முதலாளித்துவ முகாமுக்குள் பாய்ந்து கொண்டுள்ள பழைய தொழிலாளர் கட்சிகள், தொழிற்சங்கங்கள், மாஜி.தீவிரவாதிகளின் அமைப்புக்கள் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் குறைந்தபட்ச உரிமை சார்பில் தன்னும் தோன்றுவதாக இல்லை. உண்மையில் குறைந்த பட்ச உரிமைகளைக் கூட ஒழித்துக் கட்டும் முதலாளிகளின் கைக்கூலிப் படைகளாகச் செயற்படுகின்றனர். அரசாங்கத்துக்கு நெருக்குவாரம் கொணர்வதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்

படிப்பகம்

www.padippakam.com

# ஜே.வீ.பி. தலைவர்கள் அமெரிக்க தூதுவருடன் பேச்சு வார்த்தை

ஜே.வீ.பி.தலைவர்கள் குழு ஒன்று கடந்த பெப்ரவரி 19ம் திகதி கொழும்பில் உள்ள அமெரிக்க தூதுவரைச் சந்திக்கச் சென்றது. ஜே.வீ.பி.பிரச்சாரச் செயலாளர் விமல் வீரவன்சவை உள்ளடக்கிய பிரதிநிதிகள் குழு தூதரக் அதிகாரிகளை சந்தித்து நடாத்திய பேச்சுவார்த்தையின் போது கட்சிக்கு எதிராக தொடுக்கப்பட்டுள்ள பல்வேறு மிரட்டல்கள் பற்றிய சோகக் கதைகளை அளந்ததாகத் தெரியவருகின்றது. உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடும் தமது வேட்பாளர்களின் தனிப்பட்ட தகவல்களைத் திரட்ட அரசாங்கம் மேற்கொண்டுவரும் திட்டம் மனித உரிமைகள் மீறலாகக் குறிப்பிடப்பட்டாக வேண்டும் என ஜே.வீ.பி. தலைவர்கள் அமெரிக்கத் தூதரக அதிகாரிகளைக் கேட்டுக் கொண்டனர். மேலும் ஜனநாயக அரசியலில் இருந்து விடுபட்டுச்செல்ல தாம் என்றுமே கருதியது கிடையாது என இவர்கள் அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கு உத்தரவாதம் அளித்ததாக முதலாளித்துவப் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. ஜே.வீ.பி. "பாராளுமன்ற அரசியலில் ஈடுபட்டுள்ளதையிட்டு" தமது மகிழ்ச்சியைத் தெரிவித்த தூதரக அதிகாரிகள் "கடந்த காலச் சம்பவங்களை" மீண்டும் சிருஷ்டிக்காது இருக்குமாறு கேட்டுக்கொண்டதாக கூறப்படுகின்றது.

இது அமெரிக்க ஏகாதிபத்திய தூதரகத்துக்கும் தமக்கும் இடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தை பற்றி ஜே.வீ.பி. அம்பலப்படுத்தும் விடயங்களில் ஒன்றாகும். பேச்சுவாாத்தையில் சம்பந்தப்பட்ட நிஜ விடயங்கள் பற்றி நன்கு அறிந்தவர்கள் இப்பேச்சுவார்த்தையில் பங்குகொண்ட இருதரப்பினர் மட்டுமே.

ஜே.வீ.பி.தலைமை அமெரிக்க தூதரகத்திடம் மண்டியிட்ட சம்பவத்தை முதலாளித்துவப் பத்திரிகைகள் ஏதோ ஒரு சர்வ சாதாரணமான சம்பவமாகக் காட்டி செய்திகள் வெளியிட்டன. எனினும் முதலாளிகளும் அமெரிக்க 'ஏகாதிபத்திய பிரதிநிதிகளும் ஜே.வீ.பி.தலைமைகளின் அடிபணிவை மிகவும் அவதானத்துடன் மனங்கொண்டனர் என்பதில் சந்தேகம் கிடையாது. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களைப் பொறுத்த மட்டில் இந்தச் சம்பவத்தினை ஒரு பாரதூரமான சம்பவமாக மனங்கொண்டாக வேண்டும்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிளுக்கு எதிராக ஜே.வீ.பி. தலைவர்கள் ஒட்டி உறவாடாத போக்கில் செயல்படுவதை சகலரும் அறிவர். எனினும் உண்மையில் தமக்கு இருந்துவரும் மிரட்டல் பற்றி முறைப்பாடு செய்வதும், தாம் ஜனநாயகவாதிகளாகச் செயற்படுவதாக உறுதியுரை வழங்குவதும் தமது எல்லாம் வல்ல ஆண்டவன் அமெரிக்க ஏகாதிபத்தியமே என ஜே.வீ.பி.கருதிக் கொண்டுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. இதை ஜே.வீ.பி.தலைவர்கள் இச்சம்பவம் மூலம் நிர்வாணமாகக் காட்டிக் கொண்டுள்ளனர்.

இலங்கையில் முதலாளிகளின் கழுத்தை நெரித்து, ஈழம் அமைக்கப் போவது யங்கி ஏகாதிபத்தியமே என றோஹண விஜேவீர தொடக்கம் சோமவன்ச அமரசிங்க, மில்டன் சில்வா வரையிலான ஜே.வீ.பி.தலைவர்கள் கூப்பாடு போடவில்லையா? அமெரிக்க ஏகாதிபத்தியம் மனித உரிமையை மீறுகிறது! ஜனநாயகத்தை ஒழித்துக்கட்டுக்கின்றது! என்றெல்லாம் ஜே.வீ.பி. குற்றஞ்சாட்ட இல்லையா?

எனினும் மனித உரிமையை ஊர்ஜிதம் செய்யவும் ஜனநாயகத்தை வழங்கவும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தினால் மட்டுமே முடியும் என ஜே.வீ.பி.பகிரங்கமாக ஏற்றுக் கொண்டுள்ளது. முன்னர் கூறியவை பொதுமக்களின் கண்களில் -சிறப்பாக இளைஞர்களின் கண்களில் மண்தூவுவதற்கேயாகும். உண்மை நிலை என்ன? ஜே.வீ.பி.ஏகாதிபத்தியவாதிகளது கால்களை நக்கும் பாசிச குண்டர்களாகப் பரிணாமம் கண்டுள்ளது.

ஜே.வீ.பி.மனித உரிமை பேணும், ஜனநாயகம் காக்கும் அப்பாவிகளாகவே அமெரிக்க தூதரகத்துக்குச் சென்றனர் என எண்ணுவது படு முட்டாள்தனமானது. அமெரிக்க ஏகாதிபத்தியம் மனித உரிமையும் ஜனநாயகமும் காப்பதாக வெள்ளைச் சுண்ணம் தடவி, அவர்களது கைப்பொம்மையாகத் தொழிற்படத் தமது உஜார் நிலையைக் காட்டவும் ஊர்ஜிதம் செய்யவுமே ஜே.வீ.பி.அமெரிக்க தூதரக விஜயத்தை மேற்கொண்டது. நாம் ஏகாதிபத்திய ஏஜந்துகள்! இதைக் கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள! இதைக் காட்டிக் கொள்ளவே இந்த விஜயம் இடம்பெற்றது.

யூ.என்.பிக்கும் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும் வெளியேயான மூன்றாவது சக்தி தாமே என ஜே.வீ.பி.மார்தட்டிக் கொள்கின்றது. முதலாளித்துவ அரசியல் சக்திகள் ஆட்சிப் பீடம் ஏற நினைப்பின் முதலாளித்துவ அரசு , முதலாளித்துவ வர்க்கம் மட்டுமல்லாது இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஏகாதிபத்தியத்தின் ஆசியும் அவசியம் வேண்டும் என்பதை ஜே.வீ.பீ. நன்கறியும்.

# விடுதலைப் புலிகள் தமிழ்- முஸ்லீம் மோதலைத் தூண்டுகின்றது

கடந்த பெப்ரவரி 9ம் திகதி வாழைச்சேனையில் முஸ்லீம் ஊர்க்காவல் படையாள் ஒருவரைக் கொலை செய்ததன் மூலம் விடுதலைப் புலிகள் முஸ்லீம்-தமிழ் மக்களை மத ரீதியில் ஆளோடு ஆள் குத்துவெட்டப்படும் நிலைமையைச் சிருஷ்டித்துள்ளது. வாழைச்சேனை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஊர்க்காவல் படையாளான ஜுனைட் கடமை முடிந்து வீடு திரும்புகையில் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனால் முஸ்லீம் மக்களிடையே மூண்ட கோபத்தை சுரண்டிக் கொண்ட அப்பிரதேச முஸ்லீம் குண்டர் குழு தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்த மூவரைக் கொலை செய்தது. இதைத் தொடர்ந்து கம்புறுமுல்லையில் நான்கு முஸ்லீம்களைப் பிடித்த விடுதலைப் புலிகள் அதில் மூவரைக் கொலை செய்து விட்டு ஒருவரை மோசமாகத் தாக்கியுள்ளனர்.

இதன்பின் ஓட்டமாவடி பகுதியில் இடம்பெற்ற மோதுதலில் தமிழருக்குச் சொந்தமான சிகை அலங்கரிப்பு நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது. அநேகர் வாள்வெட்டு. துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். பெப்ரவரி 10ம் திகதி செங்கலடி பொதுச் சந்தையில் முஸ்லீம்களுக்கு சொந்தமான 12 கடைகள் இனந்தெரியாதோரால் தீக்கிரையாக்கப்பட்டது.

இதற்கிடையே பேய்த்தாளை யூ.என்.பி.அரசாங்க இராணுவ முற்றுகையினால் அகதிகளாக்கப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

முஸ்லீம் ஊர்க்காவல் படையாளைக் கொன்றதன் மூலம் இந்த இரத்தக் களரியை உருவாக்கிய மோதலுக்கான ஆத்திரமூட்டலை தூண்டிய விடுதலைப் புலிகள் பின்னர் நடந்து கொண்டவிதம் மோதலை மோசமாக்க வழிகோலியது. இதைக் கவனிக்குமிடத்து அது எந்தளவுக்கு தமிழ் முஸலீம் இன, மத சோவினிசத்துக்கு தள்ளப்பட்டுள்ள அமைப்பு என்பதை நிரூபிக்கின்றது. ஏகாதிபத்தியச் சார்பான தமிழ் முதலாளித்துவ அமைப்பாக நாற்றம் கண்டுள்ள விடுதலைப் புலிகள் முஸ்லீம் மக்களுக்கு எதிரான இரத்தக் களரித் தாக்குதலை நடாத்தியதன் மூலம் தமிழ் முஸ்லீம் மக்களிடையே குத்து வெட்டைச் சிருஷ்டித்துள்ளது. இது பிற்போக்கு ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ அரசியலில் இருந்து ஊற்றெடுத்த ஒன்றாகும்.

மறுபுறத்தில் விடுதலைப் புலிகளின் இந்நடவடிக்கை முஸ்லீம் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை பிற்போக்கு முஸ்லீம் முதலாளிகளின் பிடிக்குள் தள்ளிவிடவும் அவர்களின் கரங்களைப் பலப்படுத்தவும் இடமளிக்கின்றது. மேலும் வடக்கு-கிழக்கு ஒடுக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு எதிராக பொதுஜன ஐக்கிய முன்னணியின் இனவாத யுத்தத் தாக்குதலை தீவிரப்படுத்தவும் விடுதலைப் புலிகளின்

# சமூக சமத்துவ மின்மையும் அதிகாரத்துவமும்....

9ம் பக்கத் தொடர்ச்சி

ஆதரவும் உள்ளது."ஆளும் அதிகாரத்துவம் முறைமுறையான களவுகளில் ஈடுபடுவதைவிட வேறு எந்த ஒரு வழியிலும் அதனால் இயங்க முடியாதுள்ளது. இது ஒரு அதிகாரத்துவ ஆயுதக்கும்பலால் சிருஷ்டிக்கப்படுகின்றது.

## அக்டோபர் புரட்சியின் அனைத்துலகச் சிறப்பு முக்கியத்துவம்

எமது நாட்டின் துன்பகரமான தலைவிதியை ஒருவர் கணிப்பிடும் போது அவர் அக்டோபர் புரட்சி சோவியத் யூனியன் தொழிலாளர்களைக் காட்டிலும் ஏனைய நாடுகளின் தொழிலாளர்களுக்கு அதிகம் கொணர்ந்துள்ளது என நியாயத்துடன் கூற முடியும். சோசலிசத்தின் சவால் முதலாளித்துவ நாடுகளை தமது தொழிலாளர் வர்க்கங்களுக்கு மிகவும் பெரிய சமூகச் சலுகைகளை வழங்கும்படி நெருக்கியது. அரசு சமூகப் பிரச்சினையைத் தீர்த்துவைக்க உற்பத்தி, விநியோகம், கொடுக்கல் வாங்கல்களில் தலையிடுவது இந்த நூற்றாண்டின் ஒரு விதியாக உள்ளது. அதனை முதலாளித்துவம் இன்னமும் கணக்கில் கொண்டாக வேண்டியுள்ளது.

இருபதாம் நூற்றாண்டின் இரண்டாவது அரை இறுதிக் காலத்தில் முதலாளித்துவச் சுதந்திரத்தில் சில வரையறைகள் காணப்பட்டன. உதாரணமாக முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்துக்கு குறைந்தபட்ச சம்பளமும் மற்றும் உத்தரவாதங்களும் கிடைத்தன. பல தசாப்தங்களாக தீவிரமான மறுபங்கீடு இடம்பெற்றது. ஒரு புறத்தில் இல்லாதவர்களுக்கு சமூக வேலைத்திட்டங்கள் வளர்ச்சி கண்டன. மறுபுறத்தில் வருமானத்தின் மீது கடும் கண்டிப்பு இருந்ததோடு இதன் அடிப்படையில் ஒரு இறுக்கமான வரிக்கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் சமூக நிலைமையை மட்டுமன்றி பொருளாதார நிலைமையையும் ஒழிப்பதில் வெற்றிகண்டு விடவில்லை. இந்தச் சமத்துவமின்மையை முன்னேறிய, குறைவிருத்தி நாடுகளுக்கு இடையேயும் இன்றைய பதத்தின்படி வடக்கு-தெற்குக்கு இடையேயும் சகல நாடுகளின் உள்ளும் காணக்கூடியதாக உள்ளது.

சோவியத் யூனியன் ஒரு தொகை இரண்டாம் தர அரசுகளாகப் பிளவுண்டு போனமையானது முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் நலன்புரி அரசின் அழிவுக்கான முற்சகுனமாகி உள்ளது என்பதைக் குறிப்பிடுவது முக்கியமானது. இந்த முயற்சி பல தசாப்தங்களாக ஈட்டிக்கொள்ளப்பட்ட சமூகத் தேட்டங்களை ஒழித்துக் கட்டச் செய்யப்படுகின்றது.

அதே சமயம் தம்மை சோசலிஸ்டுகள் எனக் கூறிக்கொண்ட எந்த ஒரு நாட்டிலும் இன்றுவரை ஒரு நிஜமான சோசலிசப் பாதையையும் அமுலுக்கிட முயற்சிக்கப்பட்டது கிடையாது என்பதையும் நான் வலியுறுத்த விரும்புகின்றேன். 1920பதுகளிலும் 1930பதுகளிலும் இடதுசாரி எதிர்ப்பினால் அபிவிருத்தி செய்யப்பட்ட சோசலிசப் பதிலீடு கடும் பொருளாதார நடவடிக்கைகள் மூலம் சமத்துவமின்மையை கட்டுப்படுத்தி சமூகத்தை அதிகரித்த முறையில் அபிவிருத்தி செய்யும் பல்வேறு சமூகக் குழுக்களையும் மேலும் மேலும் சமத்துவத்துக்கு கொணர்வதை உத்தரவாதம் செய்வதை உள்ளடக்கமாகக் கொண்டிருந்தது.

உலகில் வசதிகள் படைத்தவர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் இருந்து வரும்வரை புதிய சமூக, அரசியல் இயக்கங்களுக்கான அடிப்படையும் தொடர்ந்தும் இருந்துவரும். இந்த இயக்கங்களின் வெற்றி அவை சோசலிச நிர்மாணத்தின் சாதகமானதும் பாதகமானதுமான அனுபவங்களில் இருந்து அவர்கள் படிப்பினைகளை பெற்றுக்கொள்ளும் அளவிலேயே தங்கியுள்ளது.

www.padippakam.com

# கொழும்பு துறைமுகத் தொழிலாளர்களுக்கு எதிரான அடக்குமுறைக்கு சீ.எம்.யூ. தலைமையே பொறுப்பு

கொழும்புத் துறைமுக எலிசபெத் இறங்குதுறை தனியார்மயத்தை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்த 185 தொழிலாளரை வேலைநீககம் செய்ததன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கம் துறைமுகத் தொழிலாளருக்கு எதிரான அரச வேட்டையை ஆரம்பித்துள்ளது.

சீ.எம்.யூ.தலைவர் ஹரிஸ்சந்திர துறைமுகத்தினுள் நுழைவதற்குத் தடைவிதித்த துறைமுக அதிகாரசபை அந்தத் தடையை எதிர்த்து தொழிலாளர்களிடையே எதிாப்பு வளர்வதைக் கண்டு அதை நீக்கிவிட்டு, அவர் துறைமுகத்தினுள் தொழிலாளரை சந்தித்து பேசுவதற்குத் தடை விதித்துள்ளது. இதே சமயம் அரசாங்கம் விடுத்துள்ள ஒரு சுற்றுநிருபம் "தொழிற்சங்க நடவடிக்கை, அரசாங்கத்தினதும் கப்பல், துறைமுக அமைச்சினதும் செயற்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் நோக்குடன் நடத்தும் முயற்சியாகவே கொள்ளப்படும்" எனவும் "துறைமுகத தொழிற் சங்கங்களுக்கு தேவைக்கு அதிகமான சுதந்திரம் வழங்கப்பட்டு உள்ளது" எனவும் குறிப்பிட்டுள்ளது.

கப்பல் துறைமுக அமைச்சின் அதிகாரியின் இந்த மிரட்டல் வடிவிலான அறிக்கையை ஐலன்ட் பத்திரிகை(பெப்ரவரி 3) மிகுந்த ஊக்கத்துடன் பிரசுரித்திருந்தது. அதே பத்திரிகை தொழிலாளரின் விடுமுறை உட்பட்ட சேவை நிலைமைகளுக்கு வேட்டுவைக்கும் அரசின் பிற்போக்கு அவசியத்தை குறிப்பிடுகையில் மேலும் கூறியதாவது: சிங்கப்பூர், துபாய், முதலிய நாடுகளில் 235 நாட்கள் வேலை நாட்களாக இருக்கையில் இலங்கையில் 180 நாட்கள் மட்டுமே வேலை நாட்களாக உள்ளது. ஜப்பானில் ஆண்டொன்றுக்கு 256 நாட்கள் -உயர்ந்த எண்ணிகை வேலை நாட்களாக உள்ளது" எனக் கூறுவதன் மூலம் இத்தயாரிப்புக்கு எதிரான போராட்டத்துக்கு ஆயத்தமாகும் தொழிலாளரை "குழப்பியடிப்பவர்களாக" பேர்சூட்டி எச்சரிக்கை செய்கின்றது.

அரசாங்கத்தின் இந்த அடக்குமுறைப் பிரச்சாரத்துக்கு ஆதரவாக சிறீலங்கா சுதந்திர தொழிலாளர் சங்கமும் ஜே.வீ.பி.யின் அகில இலங்கை துறைமுக ஊழியர் சங்கமும் கூட்டுச் சேர்ந்துள்ளன. சி.ல.சு.க.தொழிற் சங்கம் வெளிவெளியாகவே கருங்காலி வேலை செய்கையில் ஜே.வீ.பி.தொழிற்சங்கம் தொழிலாளர் போராட்டத்தை "யூ.என்.பி.சதி" என பெயர் சூட்டியுள்ளது. இந்நிலையில் பாலாதம்பு தலைமையிலான சீ.எம்.யூ.வின் வங்குரோத்து வலதுசாரி தொழிற்சங்க கொள்கைகள் தொழிலாளரைக காட்டிக் கொடுப்பதாக உள்ளது. இது யூ.என்.பி. தொழிற்சங்க அதிகாரிகளுடன் பாலாதம்பு கைகோர்த்துக் கொண்டுள்ளதன் மூலம் வெளிப்பட்டுள்ளது.


கொழும்பு துறைமுக இறங்கு துறைகள் தனியார்மயமாக்கப்படுவதை எதிர்த்து போராட்டத்தில் ஈடுபட்ட துறைமுக ஊழியர்களிடையே பிரச்சாரம் செய்யும் சோ.ச.க. அங்கத்தவர்கள்

# கொக்கா கோலா தொழிலாளர் வேலைநிறுத்தம்

கொக்கா கோலா போத்தலில் அடைக்கும் கடுவெல தொழிற்சாலையை நவம்பர் 27ல் இழுத்து மூடிய பியோ பீவரேஜர்ஸ் கம்பனி நிர்வாகிகள் கடுவெல, பியகம தொழிற்சாலைகளில் இருந்து வேலைநீக்கம் செய்யப்பட உள்ள தொழிலாளர்களின் பெயர்ப் பட்டியலை சீ.எம்.யூ.தொழிற்சங்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளது. பியகமவில் 181 பேரும் கடுவெலவில் 65 பேரும் அலுவலகத்தைச் சேர்ந்த 65 பேரும் இதில் அடங்குவர். தொழிற்சாலை மூடப்படுவதற்கும் வேலைநீக்கங்களுக்கும் எதிராக தொழிலாளர்கள் கடந்த டிசம்பர் 12ம் திகதியில் இருந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்.

பியகம தொழிற்சாலை உற்பத்தி நாட்டின் சந்தை விநியோகத்துக்குப் போதுமானது எனவும் கடுவல தொழிற்சாலை அவசியம் அற்றது எனவும் கூறியே நிர்வாகம் கடுவெல தொழிற்சாலையை இழுத்து மூட உள்ளது. அத்தோடு ஆசியாவில் உள்ள ஏனைய கொக்கா கோலா தொழிற்சாலைகளின் ஊழியர் எண்ணிக்கையை விட இலங்கையில் ஊழியர் எண்ணிக்கை அதிகமாக உள்ளதாக நிர்வாகம் கூறிக்கொள்கின்றது. இதில் இருந்து ட்ரான்ஸ்நஷனஸ் கம்பனிகள் உற்பத்திச் செலவு வெட்டுக்காக தொழிற்சாலைகளை இழுத்து மூடுவதிலும் ஊழியர் எண்ணிக்கையைக் குறைப்பதிலும் வேலையைத் துரிதப்படுத்துவதிலும் ஈடுபட்டுள்ளன.

கம்பனியின் பங்குகளில் 82 சதவீதத்தை விலைக்கு வாங்கிய கொக்கா கோலா கம்பனியுடன் இணைந்த என்.அன்ட். டி.என். கம்பனியின் கீழேயே இந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டுள்ளது. இந்த வேலை நீக்கங்களில் முதலில் 30 வீதம் இடம்பெற உள்ளதாகக் கூறப்பட்ட போதிலும் உறபத்தியில் ஈடுபடும் தொழிலாளர்களில் 50 வீதத்தினர் வேலைநீக்கம் செய்யப்படும் ஆபத்து இருந்து கொண்டு உள்ளதாகத் தொழிலாளர் கூறுகின்றனர்.

## பீட்டர் கெனமன்...

4ம் பக்கத் தொடர்ச்சி

எதிராக யூ.என்.பி.தொடுத்த இனவாத யுத்தத்தின் முன்னணி ஆதரவாளராகவும் கெனமன் விளங்கினார். இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி முதலாளி வர்க்கத்துடன் கொண்டுள்ள சக வாழ்வின் அச்சாணியாக இந்த யுத்தத்துக்கு வழங்கிய உதவி விளங்கியது. இரண்டாம் உலக யுத்தத்தில் பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கு தாம் வழங்கிய ஆதரவை இவர்கள் நினைவு கூர்ந்து கொண்டனர்.

இன்று தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் எதிர்ப்பினை தவிடுபொடியாக்கி ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் மூலதனத்தை ஈர்த்துக் கொள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் தொழிற்பட்டு வரும் ஒரு நிலையில் அதன் இன்றியமையாத பாகமாக தொழிலாளர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், ஆயிரக்கணக்கில் வேலைநீக்கம் செய்தும், தொழிற்சங்க உரிமைகளை ஒழித்துக் கட்டியும், விலைவாசிகளை பன்மடங்குகளால் உயர்த்தியும் வரும்

ல.ச.ச.க. அங்கத்தவர்களை பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளிடம் பிடித்துக் கொடுக்க உதவியவரும் ட்ரொட்ஸ்கிஸ்டுகளை ஆயிரமாயிரமாக கொலை செய்ய உதவிய பீ.பீ.பீ. கெனமன் பற்றிய குணநல ஆய்வுகளில் சமசமாஜக் கட்சியும் குதித்தமை அது பிற்போக்குத் திசையில் எந்தளவுக்கு பயணம் செய்து' விட்டது என்பதைக் காட்டிக் கொண்டுள்ளது. கெனமனதும் அவரது சகாக்களதும் எதிர்ப்புரட்சி அரசியலுக்கு வழங்கக் கூடிய ஒரே பதில்: ஸ்டாலினிசம், சமூக ஜனநாயகம், பப்லோவாதங்களால் ஏற்படுத்தப்பட்ட சடரீதியானதும் சிந்தனாவழியிலானதுமான பின்னடைவுகளில் இருந்து தொழிலாளர் வர்க்கத்தை மீட்டெடுத்து மீண்டும் உலக சோசலிசப் புரட்சியின் முன்நோக்கின் அடிப்படையில் புரட்சிக் கட்சியை கட்டி எழுப்புவதே. இப்பணி கெனமனதும் அவரது சகாக்களதும் கொலைகாரத் தாக்குதல்களுககு எதிரில் பின்னடைந்து விடாது மாக்சிசத்தின் உரிமைக்காக உறுதியான போராட்டத்தை முன்னெடுத்த நா..அ.அ.கு.வுக்கும் அதன் கிளைகளுக்கும் உரியதாகும்.

## அடுத்த இதழில்:

பு.க.க.வின் 6வது தேசிய மாநாட்டில் அனைத்துலகப் பேராளர்கள் ஆற்றிய உரையும், நிறைவேற்றப்பட்ட வேலைத்திட்டமும் அடுத்த தொழிலாளர் பாதையில் தொடர்ந்து வெளிவரும்

## வாசியுங்கள்!




இலங்கையில் மார்க்சிச பாரம்பரியங்களுக்கான போராட்ட வரலாற்றை சித்தரிக்கும் நூல்

கீர்த்தி பாலசூரிய

படிப்பகம்

www.padippakam.com

# சோசலிச சமத்துவக் கட்சியை வெற்றியீட்ட செய்வோம்!

12ம் பக்கத் தொடர்ச்சி

கொணர்வதற்கு எதிராக இராணுவத்தைக் கட்டவிழ்த்து விட்டுக்கொண்டே அவர் அப்படித் தெரிவித்தார்.சோசலிச சமத்துவக் கட்சி சிங்களம், தமிழ் பேசும் தொழிலாளர்களினதும் ஒடுக்கப்படும் மக்களதும் இளைஞர்களதும் சகல உரிமைகளையும் காக்க கீழ்க்காணும் தீர்வு வேலைத் திட்டமும் கையுமாகப் போராடுகின்றது.

*** தொழில்களைக் காப்பாற்று! சகலருக்கும் தொழில்!**

தொழில்களுக்கு ஆபத்து ஏற்படும் சகல இடங்களிலும் தொழிலாளர்கள் வேலைத்தளங்களுள் உள்ளமர்ந்து கொள்வதற்கான ஆரம்பிப்பை எடுக்க வேண்டும். தொழில்களைக் காப்பதற்கான தொழிலாளர்களதும் ஏனைய ஒடுக்கப்படும் மக்கள் பகுதியினரதும் ஆதரவைத் திரட்டிக் கொள்வதற்காக உள்ளமர்வுப் போராட்ட குழுக்களை அமைத்துக் கொள்ள வேண்டும்.

*** ஏழைகளின் சகல உதவிமானியங்களையும் காப்பாற்று!**

அகற்றப்பட்ட சகல உதவிமானியங்களையும் மீண்டும் வெற்றிகொள்ளவும் உயர்ந்து செல்லும் சகல விவசாய செலவினங்களுக்கு ஏற்ப மானியங்களை அதிகரிக்கவும் வயது முதிந்தோருக்கான ஓய்வூதியத் திட்டம் உருவாக்கவும் பிரச்சாரங்களை ஒழுங்கு செய்!

*** வீட்டுப்பிரச்சினையை தீர்ப்பதற்கு**

ஏழை மக்களுக்கு பொது வீடுகளை வழங்குவதற்காக அரச செலவினங்களை அதிகரிக்கவும் செல்வந்தர்களுக்குச் சொந்தமான மேலதிக வீடுகளை சுவீகரிக்கவும் தண்ணீர், மின்சாரம், சுகாதார வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடு !

*** இலவசக் கல்வியைப் பாதுகாப்போம்!**

நாடு பூராவும் போதுமான அளவு பாடசாலைகளை அமைக்கவும் சமத்துவமான கல்வி வசதிகளை வழங்கவும் இலவசமாக அரசாங்கத்தின் கல்வியை வழங்கவம், பல்கலைக் கழகக் கல்விக்கு தகுதியுள்ள சகலருக்கும் உரிய வசதிகளைக் கொண்ட இலவச கல்வியை வழங்கவும், ஆசிரியர்களின் உரிமைகளை காக்கவும் போராட்டத்தை ஒழுங்கு செய்! மூடப்படும் பாடசாலைகளுள் உள்ளமர்ந்து கொள்வதற்கான ஆசிரியர்--மாணவர்-பெற்றோர் நடவடிக்கைக் குழுக்களை ஒழுங்கு செய்!

*** இலவச சுகாதார சேவையை உறுதி செய்!**

நவீன சிகிச்சை முறைகளைக்கொண்ட ஆஸ்பத்திரிகளை நாடுபூராவும் விஸ்தரிக்கவும், தனியார் ஆஸ்பத்திரிகளை தேசியமயமாக்கவும், சுகாதார தொழில்நுட்ப ஊழியர்களுக்கு உரிய பயிற்சிகள் வழங்கவும் இலவச சுகாதார சேவைக்கான செலவைக் கூட்டவும் நடவடிக்கை எடு !

*** வேலைத்தலங்களில் பாதுகாப்பு சேவை நிலைமையை ஊர்ஜிதம் செய்!**

*** ஒருங்கு திரளும் உரிமை**

ஒருங்கு திரளத் தொழிலாளர்களுக்கு உள்ள உரிமையைக் காக்கவும் ஒடுக்குமுறைச் சட்டங்களை அகற்றவும் தொழிற்சங்கங்களை நசுக்கும் தாக்குதல்களுக்கு எதிராக கோபரேட்வாத தொழிற்சங்க அதிகாரிகளை நீக்க போராடு!

நடவடிக்கை எடு ! பெரும் தோட்டங்களை தொழிலாளர் நிர்வாகத்தின் கீழ் தேசியமயமாக்கு!

*** ஏழை விவசாயிகளின் உரிமைகளை காப்பாற்று!**

சகல பெரும் விவசாயக் காணிகளையும் தேசியமயமாக்கவும், ஏழை விவசாயிகளின் காணித் துண்டுகளின் உரிமைகளை உறுதி செய்யவும், விவசாயக் கடன்களை அகற்றவும், விவசாய உற்பத்திகளுக்கு உத்தரவாத விலை வழங்கவும், விசாயத்துக்கு அவசியமான வழங்கல்களுக்காக தொழிலாளர்களதும் விவசாயிகளதும் விவசாயக் கமிட்டிகளை அமைக்கப் போராடு!

*** இளைஞர்களின் உரிமைக்காகப் போராடு!**

தொழில்களுக்காக பயிற்சி வழங்கும் வசதிகளை வழங்கு, தொழில் கிடைக்கும் வரை வாழ்க்கை உதவிநிதி வழங்கு, சிறுவர் உழைப்புச் சுரண்டலை நிறுத்து, பொழுது போக்குக் காக அரச செலவில்வசதிகளை வழங்கு,. இளைஞர்களுக்கு எதிரான படுகொலைகளையும் ஒடுக்குமுறையையும் நிறுத்த நடவடிக்கை எடு !

*** இனவாத யுத்தத்தினை நிறுத்து தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய!**

இனவாத யுத்தத்து'க்கு பலவந்தமாக இளைஞர்களை திரட்டுவதை எதிர்ப்போம். வடக்கு-கிழக்கில் இருந்து இராணுவத்தை அகற்று! யுத்தச் சாட்டில் ஏகாதிபத்திய தலைமீடுகளை நிறுத்து ! யுத்தத்துக்கு ஒரு சதமோ அல்லது ஒரு ஆளோ வழங்காதே! சிங்கள-தமிழ் தொழிலாளர்களின் ஐக்கியத்தை உறுதிசெய்து, இரு தேசிய இனங்களதும் ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டு! சிறீலங்கா--ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை நோக்கி முன்னேறு!

கிராமப்புற படுகொலைகளை நிறுத்து! -சிங்கள-தமிழ் சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய். அவசரகாலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டங்களை நீக்கு. சகல வேலைத்தலங்களிலும் நாடுபூராவும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் பாதுகாப்பு குழுக்களை அமை.

*** வீட்டுப்பெண்களதும் மகளிரதும் உரிமைகளைக் காக்கப் போராடு !**

பெண் தொழிலாளர்களுக்கு சமமான சம்பளம் வழங்கு! பெண் தொழிலாளர்களுக்கு இரவு வேலையை அகற்று; பெண் தொழிலாளர்களுக்கு குழந்தைகளுக்கு குழந்தைகள் இல்லம், சம்பளத்துடன் கூடிய பிரசவ விடுமுறை, சகல கிராமங்களிலும் பிரசவ ஆஸ்பத்திரிகளை அமை!

*** கலாச்சார, கலை, விஞ்ஞான அபிவிருத்திக்கு சகல வசதிகளும் வழங்கு!**

× **அரசியலமைப்பு சபை** புதிய அரசியலமைப்பைத் தயார் செய்ய தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களின் நடவடிக்கைக் குழுக்களை அடிப்படையாகக் கொண்ட அரசியலமைப்புச் சபையை வாக்களிப்பு மூலம் தெரிவு செய்!

*** பெரும் கம்பனிகளின் கணக்கேடுகளை திற!**

அனைத்து பெரும் கம்பனிகளதும் கணக்கேடுகளை ஆராயும் பொருட்டு தொழிலாளர் கமிட்டிகளை நியமனம் செய்! தனியார் இலாபத்துக்காக தேசிய வளங்களைச் சுரண்டுவதை அம்பலமாக்கு!

அடிப்படைக் கைத்தொழில்களையும் நிதி கூட்டுத்தாபனங்களையும் நஷ்டஈடு

பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் தாக்குதல்களுக்கு எதிராக போராடும் பொருட்டு மேற்சொன்ன வேலைத்திட்டங்களை கொண்டு மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்ப சோ.ச.க.தொடங்கியுள்ளது. அந்த மக்கள் இயக்கத்தைக் கட்டியெழுப்ப இணையுமாறு நாம் உங்களை வேண்டுகின்றோம். முதலாளித்துவத்தின் முகாமுக்கு மாறிக்கொண்டுள்ள பழைய தொழிலாளர் அமைப்புகளும் தொழிற்சங்கங்களும் மக்களை முதலாளித்துவத்துடன் பிணைத்துப்போட்டு பலிகொள்ளும் பிற்போக்கு விலங்குகளாகும். தமது உரிமைகளுக்காகப் போராடும் மக்கள் இயக்கத்தை கட்டியெழுப்ப சகல வேலைத்தலங்களிலும் பிராந்தியங்களிலும் ஒடுக்கப்படும் மக்களின் பிரதிநிதிகளினைக் கொண்ட தொழிலாளர் நடவடிக்கைக் குழுக்களை கட்டியெழுப்புவது அவசியம்.

தொழிலாளர் வர்க்கம் தமது போராட்டங்களை முன்னெடுப்பது சாத்தியமாகுவது முதலாளித்துவக் கட்சிகளில் இருந்தும் அவற்றின் ஏஜன்சி கட்சிகளில் இருந்தும் அமைப்புக்களில் இருந்தும் சுயாதீனமாகி அணிதிரள்வதன் மூலமேயாகும். இனவாத யுத்தத்துக்கு எதிராக சிங்கள-தமிழ் பேசும் தொழிலாளர்களின் ஐக்கியத்தை உறுதிசெய்வதன் மூலமும் பன்நாட்டுக் கம்பனிகளின் தாக்குதல்களுக்கு எதிராக ஏனைய நாடுகளின் தொழிலாளர் ஐக்கியத்தை ஊர்ஜிதம் செய்வதன் மூலமும் தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியத்தை உறுதிசெய்ய தொழிலாளர்கள் முன்வரவேண்டும். இலாபத்துக்காக உற்பத்தியைச் செய்யும் முதலாளித்துவ அமைப்புக்குப் பதிலாக மக்களின் அவசியங்களின் பேரில் உற்பத்தியை நடாத்தும் அமைப்பை ஸ்தாபிதம் செய்வதன் மூலம் மட்டுமே சமூக சமத்துவமின்மையையும் அநீதியையும் ஒழித்துக்கட்ட முடியும். நவீன தொழில்நுட்பத்தை அதற்காகப் பயன்படுத்த முடியும். இனவாத யுத்தத்துக்கும், கடன்களுக்கு வட்டி செலுத்துவதற்கும் இலாபத்தை பொதிகட்டுவதற்கும் ஒதுக்கப்படும் பெரும் தொகையான செல்வத்தை பொதுமக்களின் நலனுக்காக பயன்படுத்துவது சாத்தியமாவது சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கு இடுவதன் மூலமேயாகும்.

சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே இந்த வேலைத்திட்டத்தினை முன்வைத்து போராடுகின்றது. அனைத்துலக ரீதியில் மார்க்சிச கலாச்சாரத்தினை மீண்டும் கட்டியெழுப்பி தொழிலாளர் வர்க்கத்தினை உலகளாவிய ரீதியில் அணிதிரட்ட போராடும் நான்காம் அகிலத்தின் இலங்கைப் பகுதியாக அது இப்போராட்டத்தை முன்னெடுக்கின்றது. 'கம்கறு மாவத்த', 'தொழிலாளர் பாதை' பத்திரிகைகள் சோ.ச.க.வின் சிங்கள, தமிழ் பத்திரிகைகளாக வெளிவந்து கொண்டுள்ளன. இந்தியத் துணைக்கண்டத்தில் சோசலிசப் புரட்சியின் ஒருங்கிணைப்பை அடிப்படையாகக் கொண்ட சோ.ச.க. இந்தியாவினுள் புரட்சிகரத் தலைமையை உத்தரவாதம் செய்யும் பொருட்டு இந்தியாவின் சோசலிசத் தொழிலாளர் கழகத்துடன் இணைந்து போராடுகின்றது. சோசலிசப் போராட்டத்துக்கு பொதுமக்களை அணிரட்டும் ஒரு நடவடிக்கையாக சோ.ச.க. பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தை அமைத்துக் கொண்டுள்ளது. தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் சரியான முன்நோக்கையும் தலைமையையும் வழங்குவது சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே. சோசலிச சமத்துவக் கட்சியினை வெகுஜனக் கட்சியாகக் கட்டியெழுப்ப இன்றே நீங்களும் இணைந்து கொள்ளுங்கள்.


சோசலிச சமத்துவக் கட்சி
மாத இதழ்



இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

சந்தாதாரர் ஆகுங்கள்

சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

## சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . . . திகதி . . . . . . . . .


படிப்பகம்

www.padippakam.com

## அம்பகமுவை பிரதேச சபை தேர்தல் பிரச்சாரம்:

# சலங்கந்தை தோட்டத்தில் சோசலிச சமத்துவக் கட்சி வெற்றிகரமான கூட்டம்

மார்ச் 4ம் திகதி சலங்கந்தை தோட்டக் கோவிலுக்கு அருகே சோசலிச சமத்துவக் கட்சி நடாத்திய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்துக்கு 70 தொழிலாளர்கள் வந்திருந்தனர். ஆரம்ப உரை நிகழ்த்திய அந்தத் தோட்டத் தொழிலாளியான தோழர்.தேவபதி சவரிமுத்து தாமும் வேறு சில இளைஞர்களும் பொலிசாரார் கைது செய்யப்பட்டு அடைத்து வைக்கப்பட்டிருந்த சமயத்தில் தாம் அங்கம் வகித்த மலையக மக்கள் முன்னணியின் எவருமே தம்மைப் பார்க்க வரவில்லை எனக் குறிப்பிட்டார். ஆனால் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் (சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி) நடாத்திய போராட்டத்தின் விளைவாகவே தாம் ஒடுக்குமுறைச் சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட்டதாகக் குறிப்பிட்டார்.தொழிலாளருக்குத் தவறற்ற தலைமையை வழங்கும் சோ.ச.க.வுடன் இணைந்து கொள்ளுமாறு அவர் தொழிலாளர்களை வேண்டினார்.

அம்பகமுவை பிரதேச சபைக்கு சுயேட்சைக் குழு -1-ன் தலைவராகப் போட்டியிடும் சோ.ச.க. மத்திய குழு உறுப்பினர் எம்.தேவராஜா பேசுகையில் முதலாளித்துவ வர்க்கம் நடாத்தும் அழிவுமிக்க நடவடிக்கைகள் பற்றியும் அவர்களுக்கு வால்பிடிக்கும் தொண்டமான் செல்லலச்சாமி, சந்திரசேகரன் உட்பட்ட தலைமைகளின் துரோக வேலைத் திட்டங்களையும் விளக்கிக் காட்டினார். இந்தத் துரோகிகளுக்கு எதிராக போராடி, தொழிலாளர் உரிமைபேண முன்னணியில் நிற்பது சோசலிச சமத்துவக் கட்சியே எனவும் அவர் குறிப்பிட்டார். நாம் இத்தேர்தலில் போட்டியிடுவது இக்கட்சியை ஒரு பரந்த சோசலிசப் புரட்சிக் கட்சியாகக் கட்டி எழுப்புவதற்கே எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் சோ.ச.க. வேட்பாளர்களாகப் போட்டியிடும் ஆஸ்பத்திரி ஊழியரான அஜித விக்ரம குணரத்னவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தினதும் சோ.ச.க.அங்கத்தவரான பர்டா இம்ரான் என்போர் உரைநிகழ்த்தினர். கூட்டம் முடிவடைந்த பின்னரும் கூட தொழிலாளர்கள் பலர் அங்கு தங்கிநின்று குழுவின் தலைவரான தோழர். தேவராஜாவுடன் தமது பிரச்சினைகளைப் பற்றிக் கலந்துரையாடினர்.

இந்த கூட்டத்தை ஏற்பாடு செய்ய சோ.ச.க.சலங்கந்தை தோட்டத்தில் நடாத்திய பிரச்சார நடவடிக்கைகளின் போது சுமார் 70 குடும்பங்கள் வரை வாழும் மாடம் தோட்டத் தொழிலாளர் தாம் முகம் கொடுக்கும் பிரச்சினைகள் பற்றிக் கருத்துத் தெரிவித்தனர். ஆர்.புஷ்பராஜ், பீ.கிருஷ்ணன், எஸ்.பாலசுப்பிரமணியம், பாலகிருஷ்ணன், பீ.மோசஸ், ஏ.சிவலிங்கம் ஆகியோர் பின்வருமாறு குறிப்பிட்டனர்: "நாம் தொலைவில் இருந்து நீங்கள் வந்து கொண்டிருப்பதைக் கண்டோம். நாம் வழமை போல் எமமைக் காட்டிக்கொடுக்கும் சந்திரசேகரன், தொண்டமான், செல்லச்சாமிகள் மீண்டும் வாக்குக் கேட்க வருவதாக நினைத்தோம். அவர்கள் வந்தால் அடித்துத் துரத்த வேண்டும் எனத் தீர்மானித்தோம். எந்த அரசாங்கம் வந்தாலும் இதே நிலை தான். நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது எமக்குத் தெரியாது."

"இத்தோட்டத்தில் மலசலகூடம் கிடையாது.ஒரு லயன் அறையில் மூன்று குடும்பத்தினர் சேர்ந்தே வசிக்கின்றோம். முன்னர் அமைக்கப்பட்ட 10 மலசலகூடங்கள் உள்ளன. இருந்தாலும் அவை பாவனைக்கு உதவாமல் பழுதடைந்து போயுள்ளன. மலசலகூடம் அமைப்பதற்கான சாமானையும் கொடுத்து அதை கட்டும் வேலையையும் தொழிலாளர்களின் தலையிலேயே திணித்துள்ளனர்."



சோ.ச.க. அம்பகமுவை குழுத் தலைவர் எம். தேவராஜா தோட்டத் தொழிலாளர்களிடையே பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்த போது எடுத்த படம்

இந்தத் தோட்டத்தில் வேலையற்ற 30 இளைஞர்களும் யுவதிகளும் உள்ளனர். இவர்களுக்கு தற்காலிக வேலை மட்டுமே வழங்கப்படுகின்றது. மரத்தை வெட்டி துண்டாடுவது ஒரு வேலை வாய்ப்பாகக் கருதப்படுகின்றது. வேலை பூரணமாகச் செய்த பின்னரே சம்பளம் வழங்கப் படுகின்றது.

"வேலை தேடியோ அல்லது வேறு எந்தக் காரணத்துக்காகவோ கொழும்பு சென்றால் தேசிய அடையாள அட்டை இல்லை எனக் கூறி கைதுசெய்து விடுகின்றனர். தோட்ட நிர்வாகி, கிராமசேவையாளரிடம் அலைந்து திரிந்து கூட அடையாள அட்டை பெற முடியாது உள்ளது."

மாடம் தோட்ட மலையக மக்கள் முன்னணி தலைவி பாசுமதி பின்வருமாறு கூறினார்: "நாம் தொடர்ந்தும் காட்டுக்கொடுப்புக்கு ஆளாகி வருகின்றோம். நாம் நீங்கள் என்ன கூறினாலும் நம்பத் தயங்குகின்றோம். எனினும் எம்மோடு ஒன்றாக வேலை செய்பவர்கள் உங்களுடன் சேர்ந்திருப்பதால் எம்மால் உங்களைப் பற்றிச் சிந்திக்க முடிகின்றது.

மாடம் தோட்ட ரொஸ்லின்: தேயிலை போனஸ் என்ற பேரில் முன்னர் தந்ததை இப்போது தருவது கிடையாது. இதற்கு முன்னர் 7அல்லது 8 கிலோ தேயிலை பறித்தாலும் பேர் போடுவார்கள். இப்போது கிலோ 15க்கு மேல் கொழுந்து பறித்தாலும் சனிக்கிழமைகளில் வேலை தருவதில்லை. சம்பளம் கிடைப்பது வேலைக்குப் போனால் மட்டுமே. இதனால் நாம் வாரத்தில் 6 நாட்கள் வேலை கோரவேண்டியுள்ளது."

# சமசமாஜக் கட்சி அங்கத்தவர்கள் சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்ந்தனர்

பலப்பிட்டிய வத்துகெதர லங்கா சமசமாஜக் கட்சியின் அங்கத்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி சோசலிச சமத்துவக் கட்சியில் சேரவும் மார்ச் 21ம் திகதி நடைபெறும் பலப்பிட்டிய பிரதேச சபை தேர்தலில் சோசலிச சமத்துவக் கட்சிக்கு வாக்களிக்கவும் எடுத்த தீர்மானத்தை லங்கா சமசமாஜக் கட்சி பொதுச் செயலாளருக்கு அறிவிக்கும் கடிதம் கீழே பிரசுரமாகின்றது.

டீ.என். சந்திரசிரி,
செயலாளர்,
சமசமாஜக் கட்சி இளைஞர் கழகம்,
வத்துகெதர
1997-2-25

அன்பின் தோழர்,

இந்த பிரதேச சபைத் தேர்தலில் சோசலிச சமத்துவக் கட்சிக்கு ஆதரவளிப்பதென என்னை உள்ளடக்கிய சமசமாஜக் கட்சி கிளையினதும் இளைஞர் கழகத்தினதும் ஒரு தோழர்கள் குழு முடிவு செய்துள்ளது.

சோசலிச சமத்துவக் கட்சியுடனான எமது கூட்டு வெறும் தேர்தலுக்காக மட்டும் அல்லாது தொழிலாளர் வர்க்கத்தை உள்ளடக்கிய ஒடுக்கப்படும் மக்கள்

செய்யப்பட்டது போல் இந்த இயக்கம் சம்பந்தமாக பொது மக்களின் ஆதரவு கிட்டியது. அன்றில் இருந்து தொழிற்பட்டுவரும் பழைய இளைஞர் கழகக் கிளையின் அங்கத்துவம் வகித்த நாம் அந்தக் கட்சியின் இன்றைய முதலாளித்துவச் சார்பு வேலைத்திட்டங்களை எதிர்க்கின்றோம்.

ட்ரொட்ஸ்கிச நான்காம் அகிலத்தின் வேலைத்திட்டங்களும் அடிப்படைக் கொள்கைகளும் இன்று தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களுக்கு அவசியமாகி உள்ளது. ஆனால் சமசமாஜக் கட்சி ஆரம்ப காலத்தில் அடிப்படையாகக் கொண்டிருந்ததும் பேணிப்பாது காத்ததுமான அந்த வேலைத்திட்டங்களை அடியோடு கைகழுவி விட்டுள்ளது.

1950பதுகளில் சமசமாஜக் கட்சி முன்னெடுத்த போராட்டத்தினால் நாம்



சமசமாஜக் கட்சியில் இருந்து வெளியேறிய அதன் அங்கத்தவர் சோ.ச.க. பலப்பிட்டிய தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் உரை நிகழ்த்துகின்றார்

அந்த அரசாங்கத்தின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்கியமையும்

× 1975ல் சிறிமாவோ பண்டாரநாயக்கவினால் சமசமாஜக் கட்சி கூட்டரசாங்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட நிலையிலும் மிகவும் வெட்கக்கேடான முறையில் பொதுஜன முன்னணிக்குள் நுழைந்தமை

1958ல் பண்டாரநாயக்க

கட்சிக் கிளைக் கூட்டங்களிலும் மாநாடுகள் பலவற்றிலும் கட்சி முதலாளித்துவ உடனுழைப்பில் இருந்து வெளியேறி ஒரு சுயாதீன அமைப்பாக வேண்டும் எனச் செய்யப்பட்ட பிரேரணைகள் நிராகரிக்கப்பட்டது. எமது அனுபவம் என்னவெனில் கட்சியைக் கட்டியெழுப்ப எந்த ஒரு அவசியமும் கட்சித் தலைமைக்கு கிடையாது. இளைஞர் கழக காரியாளர்களை சேர்ப்பதும் பயிற்சி அளிப்பதும் நீண்ட காலத்துக்கு முன்னரே கைவிடப்பட்டுவிட்டது. இன்று கட்சி 35 வயதுக்குக் கீழ்ப்பட்ட பகுதியினரை பிரதிநிதித்துவம் செய்யவில்லை. இத்தகைய ஒரு கட்சியில் சேர்ந்து செயற்பட இளம் தலைமுறையினர் ஆர்வம் இல்லாது இருப்பது அப்படி ஒன்றும் புதுமை இல்லை.

தொழிலாளர் வர்க்கம் வென்றெடுத்த எந்த ஒரு உரிமையும் வர்க்கப் போராட்டத்துக்கு வெளியில் வென்றெடுக்கப்பட்டவை அல்ல. இன்று தொழிலாளர் வர்க்கம் முகம் கொடுக்கும் எந்த ஒரு பிரச்சினையையும் தொழிலாளர் அரசாங்கத்தை அமைக்காமல் தீர்க்க முடியாது.

தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்க